பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 01 வெள்ளிக்கிழமை 16.12.2022 கதிர் 41

## இனிது ரகசியம் அல்ல!

தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் பற்றிய கருத்துக் கணிப்பு ஒன்றின் விவரம் வெளியாகி இருக்கின்றது.

அது முக்கிய தலைவர் ஒவ்வொருவர் குறித்தும் மக்களின் ஆதரவுத் தளம் பற்றிய கருத்துக் கணிப்பு அல்ல. மாறாக, ☞2

# கஜேந்திரகுமார் கூறுகின்ற முன்நிபந்தனைதான் என்ன?

## தனக்கும் அது விளங்கவே இல்லை என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், டிசம்பர் 16

இலங்கை அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைக்கு முன்நிபந்தனை என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் எதனை கூறுகிறாரென எனக்கு தெரியவில்லை. சமஷ்டி தருவதாக உறுதியளித்தாலே பேச்சுவார்த்தைக்கு வருவோமென கூறுவதா அல்லது எதனை முன்நிபந்தனை எனக் கூறுகிறார் என்பது தொடர்பான விளக்கம் எனக்கில்லை என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். ☞2



## 13 இலிருந்து தொடங்குவோம் அமைச்சர் டக்ளஸ் 'அட்வைஸ்'!

கொழும்பு, டிச.16

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுல்படுத்துவதே சரியான அணுகுமுறையாக இருக்கும் என்று தெரிவித்துள்ள, ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உருவாகியுள்ள இந்த சூழலை அனைத்து தரப்புக்களும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். ☞2





## விசுவமடுவில் வயோதிபர் விபத்தில் பலி

முல்லைத்தீவு விசுவமடு ரெட்பானாப்பகுதியில் நேற்று மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வீதியால் சென்ற முதியவரை மோதித்தள்ளியதில் முதியவர் ☞2

## ஐ.தே.கவுடனான கூட்டில் மொட்டுக்கே முன்னுரிமை

### அதன் செயலர் சாகர கூறுகிறார்

ஐக்கிய தேசிய கட்சியுடன் ஒன்றிணைந்து கூட்டணியமைப்பதால் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. ☞2

## 11 வயது மகள் மீது வல்லுறவு; தந்தைக்கு 15 வருடச் சிறை!

சொந்த மகளையே மது போதையில் பாலியல் வல்லுறவு புரிந்த தந்தை ஒருவருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று 15 வருடக் கடூழியச் சிறைத் ☞2

## சட்டவிரோத மின் வேலியில் சிக்குண்டு இளைஞன் சாவு

வவுனியா - குடாகச்சிக்கொடியவில் நேற்று முன்தினம் இரவு சட்டவிரோத மின் வேலியில் சிக்குண்டு இளைஞன் ஒருவர் பலியாகியுள்ளார். நாட்டுத் துப்பாக்கி ஒன்றும் பலியானவர் அருகில் மீட்கப்பட்டுள்ளதாக மடுக்கந்தை பொலிஸார் தெரிவித்தனர். ☞11

## தேர்தலைக் காலம்தாழ்த்த வைத்தோர் '13' பற்றிப் பேசுவது நகைப்புக்குரியது

### சாடுகின்றார் நாமல் ராஜபக்ஷ



தேர்தலைக் காலந்தாழ்த்த முயற்சித்தவர்கள் தற்போது 13 ஆவது திருத்த சட்டம் தொடர்பில் பேசுவது நகைப்புக்குரியதென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மின்சாரம், எரிபொருள், எரிவாயு ஆகியவற்றின் விலைகளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறைத்திருந்தாலும், போராட்டம் ஊடாக ☞11

## கொவிட் அவசர நிலைமை இனி இல்லை எனத் தகவல்



கொவிட் - 19 தொற்றுநோய் இனி உலகளாவிய அவசரநிலையாகக் கருதப்படாது என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கெப்ரேயஸ் நம்பிக்கை ☞11

# தமிழர் தம் மரபுரிமைகளைப் பாதுகாக்க அதிகாரங்களைப் பெற்றுக் கொடுங்கள்!

## இந்திய வெளியுறவு அமைச்சரிடம் சுரேஷ் கோரிக்கை



இலங்கையில் தமிழ் மக்களின் மரபுரிமைகளைக் காப்பாற்றுவதாக இருந்தால், அதனைக் காப்பாறறுவதற்கான அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு இருக்க வேண்டும்.

- இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கின்றார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்

'இலங்கையில் இந்தியா மேற்கொண்ட மறுமலர்ச்சிக்கு நன்றிகளும் பாராட்டுகளும்' என்ற தலைப்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சு.ஜெயசங்கர் அவர்கள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் மரபுரிமைகளை மீட்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து ☞11



காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதிர்ப்பு தன்மை பற்றிய கணிப்பு. ஒவ்வொருவரையும் மக்கள் எவ்வளவு தூரம் எதிர்க்கின்றனர் என்பது பற்றிய கருத்து அளவீடு அது.

அதன்படி அதிக புள்ளிகள் பெற்றால் மக்கள் எதிர்ப்பு அதிகம் என்பது தான் அர்த்தம்.

'சுகாதாரக் கொள்கைகளுக்கான நிறுவனம்' என்ற அமைப்பே கடந்த ஆண்டு ஒகஸ்ட் முதல் மாதாந்தம் இந்த கணிப்பை நடத்தி வருகின்றது.

அந்தக் கருத்துக் கணிப்பில் மக்கள் எதிர்ப்பைக் குறைவாக சம்பாதித்து முன்னணியில் இருப்பவர் யார் தெரியுமா? ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான். அவருக்கான புள்ளி - 46.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திஸநாயக்கவும் மக்கள் ஆதரவுத் தளத்தில் கிட்டத்தட்ட சம அளவில் இருக்கிறார்கள். சஜித்துக்கு - 54 புள்ளியும் அனுரகுமாரவுக்கு - 55 புள்ளியும் வழங்கப்பட்டுள்ளன. சஜித்தை விட மக்கள் ஆதரவுத் தளத்தில் சற்று மேம்பட்டு நிற்கின்றார் அனுர குமார.

இந்த இருவரையும் தவிர, இன்னொருவர் மக்கள் எதிர்ப்பை இந்த சமயத்தில் குறைவாக எதிர்கொண்டு கொஞ்சம் மேலான இடத்தில் இருக்கின்றார். அவர் யார் தெரியுமா? சற்று ஊகித்துப் பாருங்கள். நீங்கள் நினைக்காத ஒருவர்.

அவர் வேறு யாருமல்லர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதான். அவருக்கு உரிய தற்போதைய புள்ளி - 51 ஆகும். கடந்த ஆண்டு முதல் - 80 என்ற புள்ளிகளுடன் மக்கள் ஆதரவு தளத்தில் மிக மிகக் கீழ் மட்டத்திலிருந்த அவரின் நிலை இப்போது திடீரென மக்கள் மத்தியில் மேம்பட்டு வருவதையே அவருக்கு எதிரான எதிர்ப்பலைகள் குறைந்து வருகின்றமை காட்டுகின்றது.

இந்தப் புள்ளி விவரம் அல்லது கருத்துக்கணிப்பு ஒரு முக்கிய செய்தியை - தகவலை - தருவதாக தென்னிலங்கை அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

மக்கள் எதிர்ப்பு - அதிருப்தி - கோபாவேஷம் - போன்றவை இப்போது தணிந்து அவை பச்சாதாபமாக மாறுகின்றனவா?

தென்னிலங்கை சிங்கள மக்களின் போக்கு எப்படி அமையும் என்பதை யாரும் முற்கூட்டியே ஊகித்து விட முடியாது. அங்கு அதிசயம் நிகழ்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

ஆக, தமிழர்கள் 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள கொள்வது' நலம்.

தமிழ்தலைமைகளுக்கு - கஜேந்திரகுமார் உட்பட்ட தரப்புகளுக்கு - இந்த நிலைமை புரிந்தால் நல்லது.

- மின்னல் -

## கஜேந்திரகுமார் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமகால நிலைமை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து கூறியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கில் காணி சுவீகரிப்பு இடம்பெறுகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இடையிலான நிலத்தொடர்ச்சியை இல்லாமல் செய்து இடையில் அநுராதபுர மாவட்டத்தை புகுத்துவதற்கு முயற்சிகள் இடம்பெறுகிறது.

தற்போது தமிழ்மக்கள் பார்வையாளர்களாக இருக்காமல் தங்களுடைய இருப்பை பாதுகாக்க இருக்கின்ற சகல விடயங்களையும் பயன்படுத்த வேண்டும். இந்த விடயத்தில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என்ன செய்கின்றது என்றகேள்விஎழுகிறது. இருபத்தைந்து, ஐம்பது பேரை திரட்டி காலத்துக்கும் போராடப்போகின்றோமா? தமிழ்மக்கள் தமக்குரிய சட்டபூர்வ அதிகாரங்களை பயன்படுத்த போகினறோமா? மாகாண சபை முறைமை மூலம் பொலிஸ் காணி விடயங்களை பெறமுடியும்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தவிர தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் ஒருமித்த நிலையை எடுத்து ஜனாதிபதியுடனானகலந்துரையாடலின்போதும் இவ் விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.

அரசாங்கத் தரப்பினர் சில விடயங்களை செய்வதற்கு சம்மதித்துள்ளனர். அவற்றை அரசாங்கம் செய்யுமா, இல்லையா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

நாட்டில் நிலவும் நெருக்கடி காலங்களில் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைக்கும் சந்தர்ப்பத்தில் நாம் பேச்சுவார்த்தைக்கு செல்லாமல் சமஷ்டி தருவதாக உறுதியளித்தாலே பேச்சுவார்த்தைக்கு வருவோமென கூறிவிட்டு நித்திரை கொள்ளமுடியாது.

பேச வேண்டியது எமது கடமை. அதனை சரியான தடத்தில் கொண்டுசெல்வதும் தமிழ் தரப்புகளின் கடமை. அதனூடாக முதல்கட்டமாக இருக்கின்ற அதிகாரங்களையாவது பெற்றுக்கொள்ள வேண்டும்.

வெறுமனே ஏனைய கட்சிகளை பார்த்து 'துரோகிகள்', 'அடிவருடிகள்' எனக் கூறுவதை விடுத்து தற்போதைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான வழி என்ன என்பது தொடர்பில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வெளிப்படுத்த வேண்டும். - என்றார்.

## 13 இலிருந்து .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் செவ்வாயன்று இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் குறித்த விடயம் மீண்டுமொரு முறை வலியுறுத்தப்பட்டது.

மேலும், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கிடைத்த பல்வேறு சந்தர்ப்பங்களை தமிழ் தரப்புக்கள் தவறவிட்டிருப்பதாகவும், சந்தர்ப்பங்கள் பயன்படுத்தப்பட்டிருக்குமாயின் எமது மக்கள் எதிர்கொண்ட பேரழிவுகளை தவிர்த்திருக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த 45 வருடங்களாக தொடர்ச்சியாக தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகளுடன் சம்மந்தப்பட்டவன் என்ற வகையில், குறித்த விடயங்களை பிரஸ்தாபிப்பதற்கான உரிமை தனக்கு இருப்பதாகவும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், புதிய அரசியலமைப்பு உருவாக்கம், அன்றாடப் பிரச்சினைகள் மற்றும் இன ரீதியான பாகுபாடுகள் தொடர்பாக சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில், உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

சம்பந்தன் அவர்கள் தெரிவித்த கருத்தினை 1987, இலங்கை - இந்திய ஒப்பந்தம் வரையில் நானும் ஏற்றுக்கொள்கின்றேன்.

அதற்கு பின்னர் உருவாகிய அரசாங்கங்களின் செயற்பாடுகளில் குணாம்ச ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன.

அதன் காரணமாகவே, தேசிய நீரோட்டத்தில் இணைந்து நாடாளுமன்ற ஜனநாயகத்தினை பயன்படுத்தி தேசிய நல்லிணக்கத்தின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையுடன் ஈ.பி.டி.பி. செயற்பட்டு வருகின்றது.

அன்றிலிருந்து தொடர்ச்சியாக, 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதே, சரியான வழிமுறை என்பதையும் வலியுறுத்தி வருகின்றோம்.

தற்போதைய சூழலில், புதிய அரசமைப்பு என்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

ஆனால், 13 ஆவது திருத்தச் சட்டத்தினை அமுல்படுத்துவதற்கு ஏற்ற மனோநிலையிலேயே பெரும்பாலானவர்கள் இருப்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது. அதேபோன்று சக நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் போன்றவர்களும் இப்போது இதே நிலைபாட்டினையே தெரிவித்திருக்கின்றனர்.

எனவே, உருவாகியுள்ள சூழலை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். என்று தெரிவித்தார்.

## விசுவமடுவில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படுகாயமடைந்த நிலையில் தருபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## ஐ.தே.கவுடனான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூட்டணியில் பொதுஜன பெரமுனவிற்கு முன்னுரிமை வழங்கப்படும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கூட்டணி தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசியல் நோக்கத்தை விடுத்து பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்து, அவர் தலைமையில் அரசாங்கத்தை ஸ்தாபித்துள்ளோம். ஆட்சி கவிழும் போது எதிர்க்கட்சி அரசாங்கத்தை அமைப்பது உலக வழக்கம். ஆனால் சவால்களை பொறுப்பேற்று அரசாங்கத்தை அமைக்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கு பல முறை அழைப்பு விடுத்தும் அவர் ஆட்சியைப் பொறுப்பேற்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்தை பொறுப்பேற்றிருந்தால் அவருடன் ஒன்றிணைந்து அரசாங்கத்தை அமைத்திருப்போம். சவால்களை ஏற்க தற்துணிவு இல்லாத எதிர்க்கட்சியினர் விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்கிறார்கள். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மீள்வது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

நாட்டுக்காக எத்தரப்பினருடனும் கூட்டணி அமைக்க தயார். ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணியமைப்பதால் பொதுஜன பெரமுனவின் கொள்கைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. கட்சியின் தனித்துவத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுவோம். கூட்டணியில் பொதுஜன பெரமுனவிற்கு முன்னுரிமை வழங்கப்படும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுமாறு வலியுறுத்த வேண்டிய தேவை எமக்கு கிடையாது.

2018 ஆம் ஆண்டு பாரிய சவால்களுக்கு மத்தியில் பொதுஜன பெரமுன 231 உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது. எதிர்வரும் ஆண்டு இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன நிச்சயம் வெற்றி பெறும். - என்றார்.

## 11 வயது மகள் மீது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளார்.

மகளையே பாலியல் வல்லுறவு புரிவது உலக நீதி, இயற்கை நீதி, சமூக நீதி என்ற அனைத்துக்கும் முரணான ஒரு குற்றச் செயலாகும். அத்தகைய குற்றத்தைப் புரிந்த குற்றவாளிக்குக் கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும் எனத் தனது தீர்ப்பில் குறிப்பிட்ட நீதிபதி, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 3 இலட்ச ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் 2015 ஆம் ஆண்டு தை மாதமளவில் மாங்குளம் பகுதியில் இடம்பெற்றதாக சட்டமா அதிபரினால்

(11ஆம் பக்கம் பார்க்க )







காலைக்கதிர் Kalaikkathir

# 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன் இனப்பிரச்சினை தீர்வுசாத்தியமற்றது!

## வீரசுமன வீரசிங்க தெரிவிப்பு



தமிழர்களின் அரசியல் உரிமைக் காக குரல் கொடுக்கும் தமிழ் தலைமை கள் மாகாண சபை தேர்தலை நடத்த அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

75ஆவதுசுதந்திரதினத்துக்குமுன்னர் இனப்பிரச்சி னைக்கு தீர்வு காண்பது சாத்தியமற்றது என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பதில் தலைவர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க தலைமை யில் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற கட்சி தலைவர் களுடனான சந்திப்பு தொடர் பில் வினவிய போது மேற் கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் குறிப் பிட் டவை வருமாறு –நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு எதிர்வரும் 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு காண்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத் துக்கு தீர்வு காண்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். 13 ஆவது திருத்தத்துக்கு ஒருசில அரசியல் கட்சி தலைவர்கள் அரை குறையாக இணக்கம் தெரிவித்தார்கள்.

இவ்வாறான பின்னணியில் ஜனாதி பதி தலைமையில் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற கட்சி தலைவர்களுட னான சந்திப்பில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கலந்துகொண்டேன்.

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின்ன ணியில் அரசியல் தீர்வு தொடர்பில் அவ தானம் செலுத்துவது எந்தளவிற்கு சாத்தியமாகும்என்பதுசந்தேகத்திற்குரியது.

அரசியல்தீர்வு தொடர்பாக அவதானம் செலுத்தும் தமிழ்த் தலைமைகள் அரச மைப்பின் 13 ஆவது திருத்தம் ஊடாக தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட மாகாண சபை தேர்தலைப் பாதுகாக்க எந்த முயற் சிகளையும் எடுக்கவில்லை.

ஆகவே காலவரையறையின்றி பிற் போடப்பட்டுள்ள மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்த அவதானம் செலுத்த வேண்டும் என்பதை கூட்டத்தில் வலியு றுத்தினேன்.

பெரும்பான்மை ஆதரவுடன் ஆட்சிய மைத்த எந்த அரசாங்கத்தாலும் இனப் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட முடிய வில்லை.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவர் தலைமையிலான இந்த அரசாங்கத்துக்கு மக்களாணை கிடை யாது,அரசாங்கம் எடுக்கும் எந்த தீர்மானத்தையும் நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளப்போபவர்கள் அல்லர். ஆகவே மக்களாதரவுடன் பிரச்சினைக்குத் தீர்வு காண தேர்தலை நடத்த அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

75 ஆண்டு காலமாக தீர்க்க முடியாத இனப்பிரச்சினைக்குஒருமாதகாலத்துக்குள் தீர்வு காண்பது சாத்தியமற்றது. அரசியல் தீர்வுக்காக ஒன்றிணையும் அரசியல் கட்சி தலைமைகள் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண ஒன்றிணைய வேண்டும் என்பதை வலியுறுத்தினேன். – என்றார்.

# சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதலை அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் பெற முயற்சி!

## அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தகவல்



டிசெம்பரில் சர்வதேச நாணய நிதி யத்தின் ஒப்புதல் கிடைக்காது என்றும் அடுத்த வருட ஆரம்பத்தில் அதனைப் பெற்றுக்கொள்ள செயற்பட்டு வருவதா கவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த ஒப்பந்தத்துக்கு சர்வதேச நாணய நிதியம் ஒப்புதல் வழங்கும் என செப்ரெம்பரில் அரசாங்கம் கூறியிருந்தாலும் சமீபத்திய மாதங்களில் அதற்கான முன்னேற்றம் மெதுவாக இருப்பதால் ஜனவரி வரை நீடிக்கலாம் எனக் கூறியுள்ளார்.

கடன் வழங்குநர்களிடமிருந்து நிதி களைப் பெறுவதற்கு முன்னர் அவர்க ளிடம் இருந்து நிதியளிப்பு உத்தரவாதங் களைப் பெறவேண்டும் என்பதால் சீனா, ஜப்பான் மற்றும் இந்தியாவை உள்ளடக் கிய கூட்டுப் பேச்சுகளில் இலங்கை ஈடுபட்டுள்ளது.

பல வளர்ந்து வரும் பொருளாதாரங் களுக்கான முன்னேற்றம் மற்றும் புதிய தவணைகள் பற்றி விவாதிக்க எதிர்வரும் 22 வரை கூட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ள சர்வதேச நாணய நிதியம், அதில் இலங்கையை உள்ளடக்க வில்லை.

இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதலைப் பெறுவதில் 100 வீதம் கவனம் செலுத்தி வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் கடன் வழங்குநர்களிடமிருந்து நிதி உத்தரவாதங்களைப் பெறுவதற்குத் தேவையான ஒவ்வொரு நடவடிக்கைக ளையும் எடுத்து வருவதாகவும் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு மாதிரிப் பரீட்சை வினாத்தாள் அதிபர்களிடம் கையளிப்பு!

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு



உதவிப் பணம் வழங்குவதற்குவதற்கு மாதத்தரும் ஐந்து மாணவர்களுக்கு 2022 இல் நடத்தப்படும் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள் சி.மூ. இராச மாணிக்கம் மக்கள் அமைப்பின் மூலம் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப் பட்டுள்ளது.

இதன் போது அமைப்பின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இராச மாணிக்கம் சாணக்கியன் மற்றும் நாடா ளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர் வி.மதிமேனன் ஆகியோர் இணைந்து இந்த வினாத்தாள்களை அதிபர்களிடம் வழங்கி வைத்தனர்.

கல்முனை கல்விக் கோட்டம், பட்டி ருப்பு கல்வி வலயம், மட்டக்களப்பு கல்வி வலயம், மட்டக்களப்பு மேற்கு கல்வி வல யம், கல்குடா கல்வி வலயம் மற்றும் ஈச்சிலம்பற்றுக் கல்விக் கோட்டப் பாட சாலைகளில் கற்கும் சுமார் 7 ஆயிரத்து 600 மாணவர்களுக்கு சி.மூ.இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் மூலம் இந்த வினாத் தாள்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் இராசமாணிக்கம் மக்கள் அமைப்பினர் பல்வேறு மக்கள் நலன் சார்ந்த விடயங்களு டன் கல்விக்காகவும் பல்வேறு செயற்றிட்டங்களை கடந்த 6 வரு டங்களாக நடைமுறைப்படுத்தி வரு கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# பொது இணக்கப்பாட்டுடனான தீர்வு தேசிய பிரச்சினைக்கு அவசியமாகும்!

## அனுர பிரியதர்ஷன யாப்பா வலியுறுத்து

தேசிய பிரச்சினைக்கு பொது இணக் கப்பாட்டுடன் தீர்வு காண்பது அவசிய மாகும். இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண குறுகிய கால அடிப்படையில் எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பில் ஜனாதி பதிதலைமையில் இடம்பெற்ற சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டது என நாடா ளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற பேச் சின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து ரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட் டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வரு மாறு –

தேசிய ரீதியான பிரச்சினைக்கு தீர்வு காண்பது அவசியமாகும். இனப்பிரச் சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற பேச்சின்போது குறுகியகால அடிப்படையில் தீர்வு காண இணக்கப்பாடு எட்டப்பட்டது.

நிறைவேற்று அதிகாரம் மற்றும் அரச மைப்பை அடிப்படையாகக் கொண்டு



அரசியல் தீர்வு விவகாரத்தில் தீர்வு காணப் பட வேண்டும்.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட வேண்டிய தருணம் தற்போது தோற்றம் பெற்றுள்ளது.ஆகவே சகல தரப்பினரது ஒத்துழைப்பும் இதற்கு அவசியமாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண் பதை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகக் கருதி தீர்வு காண இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டுமாயின் அடிப்படை பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு எட்டப்பட வேண்டும். – என்றார்.

# சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களுக்காக நாங்கள் காத்திருக்கவில்லை என்கிறார் அலி சப்ரி!

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெறப்படும் என எதிர்பார்க்கப்படும் 300 கோடி டொலர் கடனுக்கு மேலதிகமாக அடுத்த வருடம் 500 கோடி டொலர் கடனை இலங்கை பலதரப்பு முகவர் நிறுவனங் களிடமிருந்து எதிர்பார்ப்பதாக வெளிவிவ கார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலைவரம் தொடர்பாக சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில், பொதுச் சொத்துக்களை மறுசீரமைப்பதன் மூலம் அரசாங்கம் சுமார் 300 கோடி டொலர் களை திரட்ட முடியும் என வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார்.

தற்போது இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் ஊடான கடனுக்கு மேலதிகமாகப் பொருளாதா ரத்தை வலுப்படுத்துவதற்கான ஏனைய சகல உபாயங்களிலும் கவனம் செலுத்தி யுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி சர்வதேச அபிவிருத்தி முக வர் நிலையங்கள் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய கடன்கள் மற்றும் உதவித்



தொகைகள் தொடர்பில் அரசாங்கம் தற்போது அதிக கவனம் செலுத்தியுள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சில அரச நிறுவனங்களை மறுசீர மைக்க ஜனாதிபதி ஆர்வமாக உள்ளார் என்றும் அதன் மூலம் இன்னும் 200 – 300 கோடி டொலர்களைத் திரட்ட முடிந்தால், நமது கருவூலம் மற்றும் இருப்புக்கள் பலப்படுத்தப்படும் என்றும் குறிப்பிட் டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கூட்டமைப்பின் குற்றம்

"மாகாண சபைத் தேர்தல்களை காலம் தாழ்த்த வைத்தோர் இப்போது 13ஆவது திருத்தம் குறித்து பேசுவது நகைப்புக்குரியது."

– இவ்வாறு கூறியிருக்கின்றார் பொதுஜன பெரமுனவின் எம்.பியான நாமல் ராஜபக்ஷ.

யார் மீது குற்றம் சுமத்தி இந்த கருத்தைத் தாம் தெரிவிக்கின்றார் என்று வெளிப்படையாக அவர் கூறாவிட்டாலும் இது தமிழ் தேசிய கூட்டமைப்பு மீதான தாக்குதல் என்பது அப்பட்டமானது.

அந்தக் குற்றச்சாட்டுக்கு தமிழ்க் கூட்டமைப்பு முற்றும் முழுக்கப் பொறுப்பு என்பதும், அது கூட்டமைப்பு இழைத்த வரலாற்று ரீதியான ஜனநாயகத் தவறு என்பதும் மறுக்கப்படக் கூடியவை அல்ல.

தமிழர்களுடைய தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியாகவே இலங்கை – இந்திய ஒப்பந்தம் முன்னெடுக்கப்பட்டது. அதன் பெறுபேறாக வந்ததே 13 ஆவது திருத்தமும் அதன் கீழான மாகாண சபை முறைமையும்.

விடுதலைப் புலிகள் இந்தியாவுடன் முரண்பட்டு, 13 ஆவது திருத்தத்தையும் தாண்டிய ஒரு தீர்வுக்காக யுத்தம் நடத்திய காலத்தில், அந்த 13 ஆவது திருத்தத்தையோ, அதன் மேலான மாகாண சபை முறைமையையோ அசிரத்தைப் பார்வையில் தமிழர் தரப்பு பார்த்தது என்பது வேறு.

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு, மாகாண சபை முறைமையில் இருந்துதான் அடுத்த கட்ட அதிகார பகிர்வுக்கு மேலேற வேண்டும் என்ற யதார்த்தப் புறநிலையில், அந்த மாகாண சபை தேர்தலுக்கு நிரந்தரமாகத் தடை போடும் கைங்கரியத்துக்கு நாடாளுமன்றத்தில் தமிழ்க் கூட்டமைப்புத் துணை போனமை தமிழர் வரலாற்றில் மிகப்பெரிய அரசியல் துரோகம்.

சரி, மாகாண சபை தேர்தல் முறைமையை மாற்றவும், அடுத்த ஒரு வருடத்துக்குள் புதிய முறைமையை ஏற்படுத்தவுமே அப்போதைய நல்லாட்சி அரசின் அந்த வேலைக்குத் துணை போனோம், நிரந்தரமாக மாகாண சபை முறைமையை முடக்கும் எண்ணத்துடன் அல்ல என்று தமிழ்க் கூட்டமைப்பு இப்போது விளக்கம் கூறக் கூடும். அதுவும் கூட ஒரு பேச்சுக்கு ஏற்கக் கூடியதுதான்.

ஆனால், ஒரு வருடம் தாண்டியும், இனிமேலும் மாகாண சபை தேர்தல் முறைமையை மாற்றி அமைக்கும் திராணி எஞ்சிய நல்லாட்சி அரசுக்கு இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்ததும், பழைய நிலைமையைத் திரும்பவும் உறுதிப்படுத்த கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

ரணிலின் நல்லாட்சி அரசு, எஞ்சியிருந்த காலத்துக்கு நாடாளுமன்றத்தில் தப்பி பிழைக்க கூட்டமைப்பின் 13 எம்.பிக்களின் தயவை மட்டுமே அப்போது நம்பி இருந்தது. அந்த சூழலில் பழைய மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை மீளவும் நடைமுறைக்குக் கொண்டு வரும் நிலைமையை ஏற்படுத்தச் செய்வது – அந்த நிலையில் – கூட்டமைப்புக்குச் சுண்டைக்காய் வேலையாக இருந்திருக்கும்.

அப்போதும் அதைச் செய்யத் தவறியது கூட்டமைப்பு. அந்த வகையில் நாமல் சுமத்தும் குற்றச்சாட்டுத் தொப்பி கூட்டமைப்புக்கு கனகச்சிதமாக விழுகின்றது. அது சரியான குற்றச்சாட்டுத்தான்.

# உலக உணவுத் திட்டத்தினுடைய நிறைவேற்றுச் சபை இலங்கையின் மூலோபாயத் திட்டத்தை அங்கீகரித்தது!

இலங்கையின் மூலோபாயத் திட்டத்திற்கு, உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த மூலோபாயத் திட்டம் 2023 முதல் 2027 டிசெம்பர் வரைக்குட்பட்ட காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டதுடன் அதற்கான பெறுமதி 74.87 மில்லியன் அமெரிக்க டொலர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையிலேயே இலங்கையின் மூலோபாயத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது, இலங்கையின் தேசியக் கொள்கைக் கட்டமைப்பு மற்றும் 2023-2027 இற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேண்தகு அபிவிருத்தி ஒத்துழைப்புக் கட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்ததாக முன்னெடுக்கப்படும்.

மேலும் இந்தத் திட்டம், நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்கு 2 இற்கிணங்க, 2030 ஆம் ஆண்டளவில், உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட போஷாக்கு எனும் இலக்கை அடைவதற்கேற்ப நாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த மூலோபாயத் திட்டம் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளான 1, 5, 10 மற்றும் 13 ஆகியவற்றின் முன்னேற்றத்துக்கும் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்கு 17 இற்கமைய தேசிய மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி பதில் கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கும் உதவும்.

இதேவேளை, உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட போஷாக்கை அடைவதற்கும் 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக அதன் நிகழ்ச்சி நிரலுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கும், இலங்கை அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளை உலக உணவுத் திட்டம் வரவேற்றுள்ளது.

உணவுப் பற்றாக்குறையால் ஏற்படக் கூடிய மோசமான நிலையை குறுகிய காலத்தில் குறைப்பதற்காகவும் நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு நிலைமையை முன்னேற்றுவதற்காகவும் இலங்கை முன்னெடுத்துவரும் தேசிய மட்டத்திலான முயற்சிக்கு உதவும் வகையில் முன்னெடுக்கப்பட்ட இரண்டாவது கூட்டத்தொடரின்போதே இலங்கையின் மூலோபாயத் திட்டத்துக்கு உலக உணவு திட்டம் அங்கீகாரம் அளித்ததாக ரோமிலுள்ள அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் டேவிட் எம். பீஸ்லி தெரிவித்துள்ளார்.

அவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், உணவுப் பாதுகாப்பு மற்றம் போஷாக்கிற்காக அரசாங்கம் செய்துள்ள முதலீட்டின் மூலம் கிடைக்கும் பலனை பன்மடங்கு அதிகரிப்பதற்கு அவசியமான தொழில்நுட்ப உதவி மற்றும் கொள்கை ரீதியான ஆலோசனைகளை வழங்க உலக உணவுத் திட்டம் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். உலக உணவுத் திட்டத்துக்கு தன்னார்வ நன்கொடையாளர்களால் நிதியளிக்கப்ப டுகிறது. எனவே, இலங்கையின் மூலோபாய திட்டங்களுக்காக உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்படும் பங்களிப்பு நன்கொடையாளர்களால் உலக உணவுத் திட்டத்துக்கு வழங்கப்பட்ட நிதி மூலமாகும் என்பது குறிப்பிடதக்கது.

# சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு சாத்தியமற்றது!

## அடித்துக் கூறுகிறார் உதய கம்மன்பில



சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு எதிர்வரும் ஜனவரி மாதமல்ல, மார்ச் மாதம் கூட பெற்றுக் கொள்வது சாத்தியமற்றது. கடன் மறுசீரமைப்பு பேச்சு இன்றும் இழுபறி நிலையில் தான் உள்ளது. சர்வதேச பிணைமுறி கடன் மறுசீரமைப்பு சவால் மிக்கது என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிவிதுரு ஹெல உறுமய அமைப்பின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

எதிர்வரும் ஜனவரி மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பையும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் 100 கோடி டொலர் நிதியுதவி பெற்றுக்கொள்ள முடியும் என அரசாங்கம் குறிப்பிடுகின்றமை முற்றிலும் பொய்யானது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக செயற்படுத்தாமல் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியாது.

இலங்கை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றுள்ளதுள்ளது. அத்துடன் சர்வதேச பிணைமுறிகள் விநியோகத்திலும் இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிடமிருந்து இருதரப்பு அடிப்படையில் கடன் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த கடன்களை மறுசீரமைக்குமாறு சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்துள்ளது.

சர்வதேச பிணைமுறிகள் விநியோகத்தில் இருந்து பெற்றுக் கொண்ட கடன்களை மறுசீரமைப்பது சவால் மிக்கது. ஏனெனில் சர்வதேச பிணைமுறிகளில் முதலீட்டாளர்கள், நிதியமுகாமையாளர்கள்மாத்திரம்உள்ளார்கள்.

பிணைமுறிகள் கடனை 35 சதவீதமளவில் இரத்து செய்யுமாறு அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது. இதற்கு 40 சதவீதமளவில் தான் தற்போது இணக்கப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது. பிணைமுறிகள் கடனை மறுசீரமைக்க வேண்டுமாயின் பிணைமுறிகள் சந்தையில் உள்ள 100 சதவீதமான தரப்பினரது இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும்.

தேசிய கடன்களை மறுசீரமைத்தால் வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படும் என்பதால் தேசிய கடன்களை மறுசீரமைக்கப் போவதில்லை என அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. ஆனால் தேசிய கடன் மறுசீரமைக்கப்பட வேண்டும் என சர்வதேச பிணைமுறிகள் சந்தை வலியுறுத்தியுள்ளது. – என்றார்.

# அச்சுவேலியில் கடை உடைத்து திருட்டு குற்றச்சாட்டில் தம்பதியினர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், அச்சுவேலி வளலாய் பகுதியில் உள்ள மீன் பிடி உபகரணங்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையத்தை உடைத்து, அங்கிருந்த பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் , தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி வர்த்தக நிலையத்தை உடைத்து, அங்கிருந்த சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன் பிடி உபகரணங்கள் திருடப்பட்டு இருந்தன.

அது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் வர்த்தக நிலைய உரிமையாளர் முறைப்பாடு செய்திருந்தார். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார்அப்பகுதியைசேர்ந்ததம்பதியினரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் அவர்களிடம் இருந்து திருடப்பட்ட பொருள்களில் சிலவற்றை மீட்டுள்ளனர்.

கணவன் மனைவி இருவரையும் தொடர்ந்தும் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM PER CHARGE*
FAAST-F2T
80-85 KM PER CHARGE*
FREEDOM
70-75 KM PER CHARGE*
Rs.550,000/- Upwards
Available Colors :
conditions apply*
India's fastest growing EV brand
2 YEARS WARRANTY*
3 FREE SERVICE*
*Range varies from mode to mode selected.
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா பூந்தோட்டத்தில் சிறப்பாக இடம்பெற்ற ஆறுமுக நாவலரின் 200 ஆவது நினைவு தினம்!











வவுனியா பூந்தோட்டம் ஆறுமுகநாவலர் வீதியில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளால் அமைக் கப்பட்டுள்ள ஞாபகார்த்த நினைவுத் தூபியில் கடந்த புதன்கிழமை ஆறுமுகநாவலரின் நினைவு தினம் காணா மலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் தமிழ் விருட்சம் அமைப்பினரால் நினைவு கூரப்பட்டது.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளால் அமைக் கப்பட்டுள்ள ஆறுமுகநாவலரின் நினைவுத் தூபியில் ஆறுமுகநாவலரின் 200 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழ்மணி அகளங்கனின் சொற் பொழிவுடன் ஆரம்பமான, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டு மலர் மாலை அணிவித்து ஆறுமுகநாவலரின் சமய மற்றும் தமிழ் பணியை நினைவு கூர்ந்தனர்.

நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுக ளுக்கு புத்தாடைகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக் கான அப்பியாசக் கொப்பிகள் என்பன தமிழ் விருட்சம் அமைப்பால் வழங்கி வைக்கப்பட்டதுடன், ஊடகவிய லாளர் குமுதனின் தாயாரின் நினைவாக மரக்கன்று களும் வழங்கி வைக்கப்பட்டன. (100)

## சாவகச்சேரி விடுதி ஒன்றிலிருந்து எட்டு அடி நீளமான முதலை மீட்பு!



சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் எட்டு அடி நீளமான முதலை ஒன்று மக்களால் உயிருடன் பிடிக்கப் பட்டுள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள விடுதி வளாகத் திற்குள் குறித்த முதலை கண்டுபிடிக்கப்பட்டது.

அந்தப் பகுதி மக்களால் பிடிக்கப்பட்ட முதலை யாழ். வனவிலங்கு பாதுகாப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

## இலங்கையில் தனிநபர்கடன் பதினொரு லட்சம் ரூபா!

இலங்கையில் தனிநபர் கடன் 11 லட்சம் ரூபாவைத் தாண்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த தொகை கடந்த 2021 ஆம் ஆண்டின் இறுதி யில், 7 லட்சத்து 93 ஆயிரத்து 888 ரூபாவாக இருந் தது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள வாராந்த பொருளாதாரச் சுட்டெண்ணின்படி,

2022 ஓகஸ்ட் மாத இறுதியில் மத்திய அரசாங்கம் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் 2 ஆயிரத்து 469 பில்லியன் ரூபா் அல்லது 24 ரில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் உள்நாட்டுக் கடன் 13 ஆயிரத்து 119.4 பில் லியனும், வெளிநாட்டுக் கடன்கள் 11 ஆயிரத்து 574 பில்லியனும் அடங்கும்.

தனிநபர் கடன் சுமையின் கணக்கீடு வருடாந்த மொத்தக் கடனை சராசரி வருடாந்த சனத்தொகை யால் பிரிப்பதன் மூலம் கணக்கிடப்படுகின்றது. அதன் படி இந்நாட்டில் தனிநபர் கடன் சுமை 11 லட்சத்து 14 ஆயிரத்து 551 ரூபாவாகும்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# இது தேவையா?

## அக்கரை அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி



எதிர்பார்த்தபடியே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பில், இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து பேசுவதற்கான அனைத்துகட்சிகளின்முதல்நல்லெண்ண கூட்டம் பிரச்சினைகள் எதுவுமின்றி முடிவடைந்துள்ளது. இன்னும் சொல்லப்போனால், தமிழர்களுக்கான தீர்வு திட்டம் குறித்து பிரச்சினை எழுப்புவர் என்று கருதப்பட்ட விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல மற்றும் ஜே.வி.பி. தரப்பினர் ஆகியோர், பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவில்லை.

இது ஒரு வகையில் வரவேற்கப்பட வேண்டியது. என்றாலும். பிற்காலத்தில், அதிகார பகிர்வு மற்றும் சமஷ்டி தீர்வு போன்ற விடயங்கள் குறித்து அனைத்து கட்சியினர் விவாதிக்கும் போது, இந்த கட்சியினர் அதனை புறக்கணிப்பார்கள் என்ற கூற முடியாது. அவ்வாறு புறக்கணித்தாலும், பின்னர் அதனை எதிர்த்து போராட மாட்டார்கள் என்றும் உறுதி கூற முடியாது. அதற்கு பழைய கால அனுபவங்கள் அத்தாட்சி.

செவ்வாய்கிழமை நடைபெற்ற கூட்டத்தில், அதிகார பகிர்வு குறித்து பேசவே இல்லை. மாறாக, பேச்சுக்கான பேச்சு என்ற விதத்தில், காணாமல் ஆக்கப்பட்டோர், காணி அபகரிப்பு மற்றும் சுவீகாரம், அதற்கும் அப்பால், அரசியல் கைதிகள் ஆகிய பிரச்சினைகள் குறித்து மட்டுமே பேசப்பட்டது. இதில், ரணில் அரசு இணக்கமாக நடந்து கொள்ளும் என்று எதிர் பார்க்க இடமிருக்கிறது.

அரசியல் கைதிகள் விகவாரத்தில், சிறையில் இருக்கும் முப்பதுக்கு மேற்பட்டோர், குறிப்பிட்ட குற்றங்களுக்காக சிறையில் இருப்பவர்கள் என்றும், அவர்கள் தரப்பில் அரசு மறுபரிசீலனை செய்ய இடமில்லை என்ற வகையிலும் அரசு தரப்பு முன்னரே கூறிவிட்டது. அது குறித்து, இனி தமிழ் அரசியல் தரப்பு அடக்கியே வாசிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

வெளிவந்துள்ள செய்திகளின் படி, காணாமல் ஆக்கப்பட்டோரை அரசு தரப்பு கொன்று விட்டது என்று சம்பந்தன் அந்த கூட்டத்தில் எடுத்துரைத்தார். அதற்கான பொறுப்புகூறலில் இருந்து அரசு தப்ப முடியாது என்றும் அவர் கூறினார் எனச் செய்திகள் கூறுகின்றன.

அங்கு தான் பிரச்சினையே. பொறுப்பு கூறல் விடயத்தில் அரசின் வழிமுறை ஒன்று, சர்வதேசத்தின் எதிர்பார்ப்பு பிறிதொன்று. தற்போதைய மாறுபட்ட அரசியல் சூழலில், தமிழர் தரப்பு எதனை எதிர்பார்க்கிறது. அரசு ஒட்டுமொத்தமாக தமிழ் சமூகத்திடம் மன்னிப்பு கேட்கவேண்டுமா, அல்லது, அதற்கு அப்பாலும் செல்ல வேண்டுமா?

காணி அபகரிப்பு மற்றும் சுவீகரிப்பு விடயத்தில், தமிழர் தரப்பு கூறுவதில் நியாயம் இருக்கிறது. அதனை முடித்து வைக்கும் பொறுப்பும் அதற்கான அதிகாரமும் ஜனாதிபதியிடம் இருக்கிறது. அதற்காக, மட்டும் ஒரு சர்வகட்சி கூட்டம் தேவையில்லை.

### பல்பொடி விளம்பரம்?

பேச்சுவார்த்தை துவங்குவதற்கு முன்பே, அதனை இந்தியா மேற்பார்வையிட வேண்டும் என்று நீதியரசர் விக்னேஸ்வரன் கோரினார். அவர் வட மாகாணத்தில் கூட்டமைப்பின் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் அவரது தனிப்பட்ட டெல்லி விஜயத்தின் போது, இந்திய அரசுத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதை தவிர்த்தார். தயக்கம் காட்டினார்.

விக்னேஸ்வரனைத் தொடர்ந்து ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் இந்தியாவை உள்ளே இழுக்க முயற்சி செய்தார். அவரும் அவரது பேச்சாளர் சுரேந்திரனும், இந்தியாவோடு நிற்காமல், பிரித்தானியா, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளையும் கூட சேர்த்துக்கொண்டார்கள். முன்பெல்லாம், தமிழ் நாட்டில் கோபால் பல்பொடி விளம்பரத்தை போல. அந்த விளம்பரத்தில்தான், இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் என்று எல்லா நாடுகளிலும் புகழ் பெற்றது என்று அனேக நாடுகளின் பெயர்கள் சேர்க்கப்பட்டிருக்கும்.

ஆனால், செவ்வாய்கிழமை கூட்டத்தில் இந்தியாவின் பங்களிப்பு குறித்து யாருமே வாய் திறக்கவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன. சரியான முடிவு. இந்தியாவின் முடிவு தெரியாமல், தாமாகவே வாய்க்கு வந்தபடி பேசி, அரச தரப்பிடமிருந்து வாங்கிகட்டிக் கொள்ள யாருமே தயாராயில்லை என்று புரிகிறது.

### பிறநாட்டு தலையீடு

இது ஒரு புறமிருக்க, இந்தியா தலைமையில் ஒரு மேற்பார்வை குழு அமைக்க மேலை நாடுகள் ஒத்துக்கொள்ளுமா என்பதைக் கூட அவர்கள் யோசித்தனர் எனத் தெரியவில்லை. இதில் நாடுகளில் பெரியவன் – சிறியவன் என்ற பாகுபாட்டிற்கு இடமில்லை. மாறாக, இலங்கைப் பிரச்சினையில் அந்த மூன்று மேற்குலக நாடுகளின் நிலைமை வேறு, இந்தியாவின் நிலைமை வேறு.

குறிப்பாக, மனித உரிமைகள் விடயத்திலும், அது சார்ந்த சர்வதேச போர் குற்றங்கள் விசாரணையிலும், இந்தியாவின் நிலைமை தெளிவாக்கப்பட்டுள்ளது. இது விடயத்தில் பிற நாட்டு தலையீட்டை இந்தியா ஆதரிப்பதில்லை.

தற்போது, தமிழ் கட்சிகள் போர் குற்றங்கள் குறித்து பேசவில்லை என்றாலும், முந்தைய அனுபவத்தை வைத்து பார்க்கும் போது, அடுத்தடுத்த கட்டங்களில் அது குறித்து அவர்களில் ஒரு சிலராவது பேச துவங்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

இது விடயத்தில், அனைத்து கட்சி கூட்டத்தில், சம்ப்ச்ந்தன் சாமர்த்தியமாக பேசி, பொருள் தலைப்பையே மாற்றிவிட்டார். அதாவது, காணாமல் போனோரை அரசு கொன்றுவிட்டது என்று கூறி, உண்மை அறியும் விசாரணை தேவையில்லை என்றளவில பேசியுள்ளார். வரவேற்கத்தக்கது. ஆனால், அதனை புலம்பெயர்ந்தோர் அமைப்புகள் அனைத்துமே ஆதரிக்குமா, அல்லது அவர்களது உள்ளூர் ஊது குழல்கள்வாய்மூடிஇருக்குமா,என்பவற்றை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

இது தவிர, தமிழர் தரப்பின் சமஷ்டி தீர்வு குறித்தும் அவர்களிடையே கூட பல்வேறு நிலை கருத்துகள் நிலவுகின்றன. சமஷ்டி, அதிகார பகிர்வு, உச்சபட்ச அதிகார பகிர்வு, அதி உச்சபட்ச அதிகார பகிர்வு என்று பல்வேறு வசனங்கள் சுற்றிசுற்றி வருகின்றன. அவை குறித்து, அவர்களில் யாருக்குமே தெளிவில்லை. அனைவருக்கும் ஒரே கருத்து உள்ளதா, என்பதும் தெரியவில்லை.

இதில், அதி உச்சபட்ச அதிகார பகிர்வு என்பது அமெரிக்காவில் தற்போது வழமையில் உள்ள சமஷ்டி திட்டத்தின் அடிப்படையில் வைக்கப்படும் கோரிக்கை என்றே தோன்றுகிறது. அத்தகைய கோரிக்கையை இந்தியா ஆதரிக்குமா, என்று தெரியவில்லை. புலம்பெயர்ந்த தமிழர்களின் வாக்குவங்கிக்கு அப்பால் சென்று, பிரித்தானிய அரசியல்வாதிகளுக்கு அப்பால், அங்குள்ள அரசு இயந்திரமும் அத்தகைய கோரிக்கைக்கு முழு அளவிலான ஆதரவை வழங்குமா, என்பது கூட கேள்விகுறியே!

### சுடுபட்ட பூனை

இலங்கை விடயத்தில், இந்தியா, ஒரு சூடுபட்ட பூனை. பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக முடிந்த கதை. தமிழர் தரப்பிற்காக களம் இறங்கி, தமிழ் இளைஞர் குழுக்களுக்கு ஆதரவாக ஆயுதம் மற்றும் ஆயுத பயிற்சி அளித்த இந்தியா, அதே சமயம், தமிழ் மிதவாத தலைமைகளைக் கைவிட்டுவிடவில்லை.

இன்னும்சொல்லப்போனால், நோர்வே துவங்கிய மேற்குலக நாடுகள் பிற்காலத்தில் கூறிய 'லெவல் –பிளேயிங் பீல்ட்' என்ற கருத்திற்கு முன்னோடியாக அமைந்ததே இந்தியாவின் இந்த முயற்சி தான். அதாவது, மிதவாத அரசியல் தலைமைகளின் கரங்களை வலுப்படுத்த மட்டுமே, இந்தியா ஆயுதக் குழுக்களை ஊக்குவித்தது. பிரபாகரன் என்ற தனி மனிதன் தமிழ் மக்களின் சர்வாதிகாரியாக மாறுவதற்காகல்ல.

ஆனால், அன்றைய ஜெயவர்தனே அரசு, அமிர்தலிங்கம் – சிவசிதம்பரம் தலைமையிலான மிதவாத தமிழ் தரப்புடன் பேச்சுவார்த்தை துவங்கிய பின்னரும், போராளி குழக்கள், குறிப்பாக விடுதலை புலிகள் இயக்கம் அடக்கி வாசிக்காமல் போனது, தமிழ் சமூகத்தின் துரதிர்ஷ்டமே. காரணம், அமிர்தலிங்கம் போன்ற தமிழ் தலைவர்களையே பதம் பார்த்த விடுதலை புலிகள இயக்கம், தன்னை கூர் செய்த இந்தியாவையும் விட்டு வைக்கவில்லை. ராஜீவ் காந்தி படுகொலையை கூட ஒரு துன்பியல் சம்பவம் என்றளவிற்கு பின் தள்ளிவிட்டனர்.

இதற்கு பின்னரும், இந்தியா, இவர்கள் சொல் கேட்டு ஆடுவார்கள் என்று யாராவது நினைத்தால், அது அவர்களது அறிவீனத்தையே குறிக்கும். அல்லது, அவர்கள் இன்னமும் கிணற்று தவளைகளாகவே வாழ்கிறார்கள், அல்லது, குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றே முடிவு செய்ய வேண்டும்.

### யார் கண்ணை குத்துவது?

அந்த வகையில், செல்வம் வகையறா முன்னெடுத்த இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கான அனைத்து தமிழ் கட்சிகளின் கடிதமும் கூட, தமிழ் தலைமைகளின் இரு முகங்களையே மீண்டும் உலகிற்கு காட்டியது. அல்லது, அவர்களுடையது, 'பன்முக தன்மை' எனலாம். அந்த கடிதத்தை அவர்களே மறந்துவிட்டார்கள்.

ஒருபுறம், இந்தியாவின் வழிகாட்டுதலின் பேரில் இனப்பிரச்சினைக்கு முடிவு காண முயற்சிப்போம் என்று பாசாங்கு. மறுபுறம், சர்வதேசம் மூலமாக, ஜெனிவா, ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பிடம் மன்றாடுவோம், என்ற செயல்பாடு. இது தான், தமிழ் தலைமைகளின் சித்து விளையாட்டு.

இதில் யார் கையை வைத்து, யார் கண்ணை, அவர்கள் குத்தப் பார்க்கிறார்கள்? உண்மையில், தமிழர் அரசியல் தலைமைகள் திரும்ப, திரும்ப குத்திக் கொண்டிருப்பது, தமிழ் சமூகத்தின் குருடாக்கப்பட்ட கண்களை தான். அதுவும் அவர்களது விரல்களாலேயே.

### மானம், மரியாதை

இந்தியாவை பொறுத்தமட்டில், ஒன்றுபட்ட இலங்கையில், தமிழ் சமூகம் மானத்துடனும், மரியாதையுடனும், பாதுகாப்பாக, உரிய அரசியல் அதிகாரங்களுடனும் வாழ வேண்டும் என்று நினைத்தன் காரணமாகவே, கடந்த எண்பதுகள் துவக்கம் முயற்சிகளை முன்னெடுத்தது. அதே நிலைமை இன்றும் தொடருகிறது. எனவே தான், மாறி – மாறி பேசும் தமிழ் அரசியல் தலைமைகளிடம் சிக்கிக் கொள்வதற்கு மோடி அரசு தயக்கம் காட்டுகிறது, என்றே எண்ண தோன்றுகிறது.

அந்த வகையில், அன்றைய ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசு முன்மொழிந்த பதிமூன்றாவது சட்டதிருத்தத்தை தற்போதைய, பாரதீய ஜனதா தலைமையிலான மோடி அரசும் ஆதரிக்கிறது. இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் அமைந்த அனைத்து அரசுகளும் அந்த நிலைபாட்டிலேயே தொடர்ந்து வந்திருக்கின்றன. இதிலிருந்தே, இலங்கை தமிழ் தலைமைகளுக்கு, இந்தியாவின் நிலைப்பாடு குறித்து தெளிவான எண்ணம் தோன்றியிருக்கவேண்டும்.

### தும்பை விட்டு, வாலை பிடி

ஆனால், வழக்கம் போலவே, தமிழ் தலைமைகள் தும்பை விட்டு, வாலை பிடிக்கும் விளையாட்டில் இறங்கியிருக்கிறார்கள். இது யாரை ஏமாற்ற? இலங்கை அரசை பொறுத்தவரையில், அதுவும் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மற்றும் சமூகத்தை பொறுத்த வரையில், அவர்கள், ஆக கொடுப்பதற்கு தயாராக இருப்பது எனனவென்று, தமிழர் தரப்பிற்கு நன்றாகவே தெரியும்.

அதனால்தானோ என்னவோ, அதனை விட உயரமான ஓர் இலக்கை நிர்ணயித்து, சமஷ்டி என்றெல்லாம் கோரிக்கை வைக்கிறார்கள். அரசியல் தீர்வு குறித்த பேச்சு வார்த்தை என்பது, உயரம் தாண்டுதல் அல்லது நீளம் தாண்டுதலுக்கான பயிற்சியா, என்ன – அடுத்தடுத்து, இலக்கை உயர்த்திக்கொண்டே போவதற்கு?

உண்மை நிலை என்னவென்றால், தற்போதைய இலங்கை அரசியல் – பொருளாதார நிலையில், இந்தியாவின் அனுசரணையோடு பெறப்பட்ட பதிமூன்றாவது சட்டத்தின் கீழான அதிகார பகிர்வுகளை தமிழர் தரப்பு பெற்றுக்கொண்டலே, எவ்வளவோ சாதிக்கலாம். அன்று, அந்தச் சட்டம் செயல்பாட்டிற்கு வந்தபோது, தமிழர் தரப்பு உாராக இருந்திருந்தால், தங்களது இறைமையை, விடுதலை புலிகள் இயக்கத்திற்கு தாரைவார்க்காது தொடர்ந்திருந்தால், தற்போது அவர்களின் நிலைமை விண்ணைத் தொட்டிருக்கும்.

மாறாக, பிரபாகரன் சொல் பேச்சு கேட்டு நடந்ததால், அவர்களில் பலரும் விண்ணை தொட்டார்கள். அவ்வளவு தான் வித்தியாசம். நினைக்க, நினைக்க, வயிற்றெரிச்கலே மிஞ்சுகிறது.

இது, இந்தியாவிற்கு, தேவையா, என்ன?

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# வாசித்தலை சுவாசிப்போம்

கூரிய வாளாலும், சிறந்த புத்தகத்தாலும் உலகை ஆளலாம் என நமது முன்னோர்கள் கூறியுள்ளார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் பொறுத்தமட்டில் சிறந்த புத்தகத்தால் தான் உலகை ஆள முடியும். இதற்கு வாசிப்பு பழக்கம் இன்றியமையாததாக உள்ளது. 'வாசிப்பதன் மூலம் மனிதன் பூரணம் அடைகின்றான்' என பிரன்சிஸ் பேர்கன் கூறியுள்ளார். நாம் வாசிப்பதன் மூலம் பல்வேறுபட்ட விடயங்களை அடைந்து கொள்ள முடியும்.

பண்டைய காலத்தில் எழுத்துக்கள் உருவாகி, பின்னர் வார்த்தைகளாக மாறி, மொழியாக வந்துள்ளது. குழந்தையாக இருக்கும் போது அந்த எழுத்துக்களை அடிப்படையிலிருந்து பழகி பின் எழுத்துக்கூட்டி வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம். நாம் சிறுவயதிலிருந்து முதியோர் ஆகும் வரை பலவகைப்பட்டனவற்றை வாசித்துக் கொண்டிருப்போம். இன்றைய காலகட்டத்தைப் பொறுத்த வகையில் மாணவர்கள் புத்தகத்தைப் படித்து மட்டும் ஒரு சிறிய வட்டத்தில் இருந்து விடக்கூடாது. பலவகைப்பட்ட நூல்களைத் தேடிப் படித்துக் கொள்ள வேண்டும்.

வாசிப்பு என்பது எதற்காக என்ற கேள்வி கணைகள் எழலாம். தவறில்லை. நாம் வாசிப்பது அறிவுக்காகவா? இல்லை. நாம் வாசிப்பது வாழ்வதற்காக. இதற்கு சிறந்த உதாரணம் ஜவகர்லால் நேரு தனது மகள் இந்திரா பிரியதர்னிக்கு எழுதிய கடிதத்தில் வாழ்வதற்காக வாசி எனக் குறிப்பிட்டு வாசிப்பதற்கு தனது மகளை ஊக்கப்படுத்தியுள்ளார். மற்றும் நாம் வாசித்தலைக் கட்டாயப்படுத்தக்கூடாது எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆம், அதாவது நாம் நமக்கு விருப்பமான நூல்களை வாசிக்கலாம். உதாரணமாக நாவல்கள், சிறு கதைகள், கட்டுரைகள், செய்தித்தாள் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். நமக்கு பல்வேறுபட்ட இலட்சியங்கள், ஆசைகள் காணப்படுகின்றன. ஆவற்றில் சிறந்தவற்றைக் கண்டு பிடித்து முன்னோக்கி பயணிக்க வாசித்தல் முக்கிய பங்கு வகிக்கின்றது.

நீங்கள் நீரை நிலத்தில் ஊற்றுங்கள். அது பரந்து சகல இடங்களும் செல்லும். ஆனால் அதை வாய்காலில் ஊற்றுங்கள் அது நூறு மடங்கு வேகத்துடன் தனது இலக்கை நோக்கி சீறி பாய்ந்து செல்லும். அதைப் போலத்தான் புத்தகங்கள். எமது இலக்கை அடையும் பாதையையும் தன்னம்பிக்கையையும் தருகின்றன. எவன் ஒருவன் பல நூல்களைத் தேடித் தேடி வாசிக்கின்றானோ அவனே அனைத்து துறைகளிலும் முன்மாதிரியாக திகழ்வான். அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன் பல மைல்கள் நடந்து சென்று நூல்களை இரவல் பெற்று வாசித்ததமையால் தான் அவர் பிற்காலத்தில் சிறந்த தலைவராக வந்தார்.

நாம் வரலாற்றை பின்னால் புரட்டிப்பார்த்தால் புரியும். நமது கவனத்தை ஈர்த்த பலரும் புத்தக வாசிப்பை வலியுறுத்தி இருப்பார்கள். அறிஞர் அண்ணா தனது புத்தக வாசிப்புக்காக அறுவைச் சிகிச்கையை தள்ளிப் போட்டார். மகாத்மா காந்தியிடம் ஒருவர் கேட்டார் உங்களிடம் நூறு கோடி பணம் இருந்தால் என்ன செய்வீர்கள்? என்றார். இதற்கு மகாத்மா காந்தி நூலகம் அமைப்பேன் எனக் கூறினார். முன்னர் அறிஞர்கள் புத்தகத்தை தேடி தேடி வாசித்தார்கள். இதனால் அவர்களால் பல நூல்களை ஒன்றிணைக்க் நூலகத்தைக் கட்டினார்கள். தற்போது நூலகத்தில் நூல்கள் எவரும் தீண்டுவாரற்று கிடக்கின்றன. யூலியஸ்சீசர் கூறுகிறார் 'ஆயிரம் புத்தகத்தை வாசித்த ஒருவனை காட்டு இவன்தான் எனது வழிகாட்டி' என்று. கல்லினை உளி செதுக்குவது போல புத்தக வாசிப்பு எம்மை பூரணமான மனிதனாக ஆக்குகின்றது. 'பாடை ஏறினும் ஏடது கைவிடேல்' என்று எமது முன்னோர்கள் கூறுகின்றார்கள். அதாவது இறக்கும் வரை புத்தகங்களை வாசிக்க வேண்டும் என்கிறார்கள். சாக்கிரட்டீஸ்க்கு நஞ்சு கொடுக்கும் வரை புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார். இது யாருக்கு தெரியும்?

விபுலானந்தர், ஆபிரகாம் லிங்கன், அப்துல்கலாம், பிளேட்டோ, மாட்டீன்லூதர் கிங், சார்லின் சப்லின், மகாத்மா காந்தி இவர்கள் அனைவரும் வாசித்தலை சுவைத்தார்கள், ரசித்தார்கள், உண்டார்கள். சொல்லப் போனால் பாரதிதாசன் கூறுவதுபோல 'தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும் சையோக புரிந்ததொரு வேளை தன்னில் இயற்கை எழில் எல்லாம் கண்டேன். மனம் முகர்ந்தேன், சுவைகள் உண்டேன் மிக்குயர்ந்த



கவிஞர் நெஞ்சில் மகாசோதியில் கலந்தது எனது நெஞ்சம்'.

கம்பனின் செய்யுளோ, பாரதியின் பாடல்களோ, ஏன் கண்ணதாசனின் வரிகளோ அவற்றை வாசித்தால் நமது வாழ்க்கையையே மாற்றிவிடும். எமது காலம் மிகவும் குறுகியது. அவற்றுள் நாம் சகல அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால் புத்தகங்களை வாசிப்பதன் மூலம் அனுபவங்கள், இன்பதுன்பங்கள், வறுமை அனைத்தையும் கண்முன்னே பார்த்து வாழ்க்கைக்கு தயார் நிலையில் இருக்கின்றோம்.

'தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்தூறும் அறிவு' என்கின்றார் வள்ளுவர்.

அதாவது எவ்வளவு ஆழமாக மண்ணை தோண்டுகின்றோமோ அவ்வளவு நீர் வரும். அதே போல எவ்வளவு வாசிக்கின்றோமோ அவ்வளத்திற்கு அறிவு பெருகும்.

இன்றைய காலகட்டத்தில் வாசிப்பு என்பது அருகிச் சென்று விட்டது. பெற்றோர்களும் மாணவர்களை வாசிப்பதற்கு ஊக்கப்படுத்துகின்றார்கள் இல்லை. மற்றும் அரசாங்கம் பல நடவடிக்கைகளை கட்டாயப்படுத்த வேண்டும். பாடசாலை மாணவர்களுக்கு இரு பாடவேளையாவது நூலகத்திற்காக ஒதுக்க வேண்டும். வாசிப்பதன் மூலம் நமது ஞாபக சக்தி அதிகரிக்கின்றது. நாம் கேட்டதையும், பார்த்ததையும் விட வாசித்தலே நீண்ட காலம் மனதில் இருக்கும். ஆகவே வாசித்தலை சுவாசிப்போம்.

- மு.பிரியங்கா -
(யா/இந்துமகளிர் கல்லூரி)

# கல்வி அழகே அழகு

நாம் வாழுகின்ற வேகமான உலகிலேயே நாம் முன்றேற்றகரமான வாழ்வினை வாழ்வதற்கு ஏழை முதல் பணக்காரர் வரை அனைவருமே கல்வியைப் பெற முயற்சிக்கின்றார்கள். ஆனால் அக்கல்வி அனைவரிடமும் முழுமையாக அமைவதில்லை. ஆனாலும் பலர் இச்செல்வத்தைப் பெற பல வழிகளில் முயற்சிக்கிறார்கள். ஏன்,அவ்வாறு முயற்சிக்க வேண்டும் என்றால் புயபலம் படைத்தவர்களைவிட கல்வியறிவு படைத்தவர்களையே இவ்வுலகம் போற்றும். கற்றவர்கள் வாழ்கின்றபோதும், வாழ்ந்த பின்பும் அவர்களின் புகழை உலகம் எப்போதும் போற்றும். அதனாலேதான் எம்முன்னோர்கள் 'அரசனுக்கு தன் ஊரில் மட்டும்தான் சிறப்பு கற்றவர்களுக்கு சென்ற இடமெல்லாம் மதிப்பு' என அழகாக எடுத்துக் கூறியுள்ளனர்.

மனிதன் தமக்கிடையே தகவல்களைப் பரிமாறத் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை மனிதனின் இளமைப் பருவத்திலிருந்து முதுமைப்பருவம் வரை கல்வியானது தொடர்ந்து வருகின்ற முடிவில்லாப் பாதை போன்றது. இவ்வாறான பாதையில் நாம் எவ்வளவு தூரம் செல்கிறோம் என்பதிலிருந்தே எமது கல்வி வளம் பெறுகின்றது. இவ்வாறான கல்வியை நாம் எப்போது வேண்டுமானாலும் பெற்றுவிடமுடியும் என்று எண்ண முடியாது. நாம் கற்கின்ற கல்வி நாம் வாழ்கின்ற வாழ்நாள் முழுவதும் நிலைக்க வேண்டுமென்றால் இளமைப் பருவத்திலிருந்தே அச்செல்வத்தை சேமிக்க வேண்டும். 'நாம் பிறக்கும்போது எதனையும் எடுத்துவரவில்லை,



செல்லும்போது எவற்றை எடுத்துச் செல்ல முடியாது' என்பது பகவத் கீதையினுடைய செய்யுளாகும். ஆனாலும் பணம், பொருள் போன்ற செல்வங்கள் எப்போதும் எமது வாழ்க்கையில் வரப்போவதில்லை. ஆனால் கல்வியானது நாம் செல்கின்ற வழி முழுவதும் எம்மை வழிநடத்திச் செல்கின்ற சிறந்த கருவாக எப்போதும் வரும் என்பதில் எவ்வித அச்சமும் இல்லை.

இனியவை நாற்பது, விவேகசிந்தாமணி, முதுமொழிவெண்பா போன்ற செய்யுள்கள் பல நீதிக் கருத்துக்களை எடுத்துச் சொன்னாலும் தலையாக கல்வியின் சிறப்பையும், கற்றவர்களின் சிறப்பையும், கற்றதனால் ஒருவன் அடைகின்ற உயர்ந்த நிலையையும் அழகாக இலக்கிய மொழிநடையில் பல கவிஞர்களாலும், புலவர்களாலும் பாடப்பட்டுள்ளது. அவ்வாறாக பல வித்துவான்களால் உயிரினும் மேலாக எடுத்துக் கூறுவதற்கு என்ன காரணம்? ஏனென்றால் பணம் பொருளினால் முன்னேறியவர்களும் உள்ளனர், தாழ்ந்தவர்களும் உள்ளனர். ஆனால் கல்வியினால் முன்னேற்றமடைந்தவர்களை மாத்திரமே நாம் காணமுடியும். கல்விகற்று வீழ்ச்சியடைந்து போனவர்கள் என இப்பிரபஞ்சத்திலேயே யாரும் இல்லை.

ஓர் சிறந்த கல்வியானது சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு மிகப்பெரிய கருவியாகவுள்ளது. திருவள்ளுவர் முதல் ஔவையார் வரை அதாவது ஒவ்வோர் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார் வரை கல்வி பற்றி ஒரு அதிகாரமோ, ஒரு குறட்பாவோ பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இவர்களைப் பற்றி உலகம் இன்றும் பேசுவதற்கான காரணம் அவர்கள் பெற்றுள்ள அழகான கல்வியே. கல்வி என்பதில் பாடங்களைக் கற்பது மட்டுமல்ல பழக்கவழக்கங்களைக் கற்பதே மிக முக்கியமான படியாகும். ஏனென்றால் கல்வியை மட்டும் கற்பதனால் கல்வி முழுமையடையப் போவதுமில்லை, அவ்வாறான கல்வியினால் எவ்வித பயனுமில்லை. அதனால்தான் சிறுபராயத்திலே அவ்வாறான கல்வியைக் கற்றப் பாடசாலைக்குச் செல்கின்றோம். பாடசாலையில் தொடங்கப்பட்ட எமது கல்வியானது முடிவெல்லை இல்லாதபோது, எமது வாழ்வின் இறுதிவரை ஏதோவொன்றைக் கற்றுக் கொண்டேயிருக்கின்றோம். எமது வாழ்க்கை அழகாக மாறுவதற்கு கல்வியே மாபெரும் உதவியாக இருக்கிறது. ஆகவே கல்வியினால் எமது உலகம் அழகாகின்றது. அதனால்தான் 'கல்வியழகே அழகு'.

- மகேந்திரராஜா வானதி -
(யா/ இந்து மகளிர் கல்லூரி)

காலைக்கதிர்
Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## சுயநிர்ணயம் – பௌத்தம் – இணக்கம்

**அங்கம் - 213**

நேற்றைய பதிவின் பின் கூட்டமைப்பின் – தமிழரசு கட்சியின் – தீவிர ஆதரவாளர் ஒருவர், 'நாட்டில் இருக்கும் கட்சிகள் எவையுமே பிரிவினை கேட்கக் கூடாது, பேசக்கூடாது, அப்படிப் பேசுவதைக் குற்றமாக்கும் அரசமைப்பின் ஆறாவது திருத்தம் இருப்பதை நீங்கள் தெரிந்து கொள்ளவில்லையா?' – எனக் கடிந்து, 'அது இருப்பதால்தான் அவர்கள் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தைத் திரும்பவும் மக்கள் முன் வைக்கவில்லை, சர்வஜன வாக்குரிமை தரப்பட்டால் அவர்கள் பிரிவினைக்குத்தான் வாக்களிப்பார்கள்' என்றார். வாஸ்தவம். உண்மை.ஆறாம் திருத்தச் சட்டத்தை நான் அறிந்து கொள்ளாமல் இல்லை.

அதேசமயம் கவிஞர் காசி ஆனந்தன் கூறிய மாதிர, "உலக நாடுகளில் தஞ்சம் புகுந்த 15 லட்சம் ஈழப் போராளிகள் தமிழீழ விடுதலை ஒன்றே குறிக்கோளாய் குமுறிக்கொண்டு தணலென எரியும் நெருப்புமழையாய் நிற்கிறார்கள்" என்பதன் உண்மைத் தன்மையையும், அதன் யதார்த்தப் பரிமாணங்களையும் தினம் தினம் அதில் ஈடுபாடு கொண்டுள்ளமையால் அவற்றின் பக்குவங்கள் பற்றியும் அறிந்துள்ளேன். பொதுவாக தமிழ் மக்களுக்கு சிங்கள ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, சுயாட்சி பெற்றுக் கொள்வதில் ஆசை,ஆர்வம் உண்டு. ஆனால் ஆசைக்கும் இலட்சியத்திற்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. நடைமுறை சாத்தியப்பாடுகள் பற்றி இந்த 15 லட்சம் ஏதிலிகளும் அர்ப்பணிப்பு உள்ளவர்களாக இருக்கிறார்களா, அன்றில் பேசி, ஊடகங்களில் எழுதிக் கலைந்து போகின்றார்களா என்பது முக்கியம்.

இணைந்திருந்த ஒரு கட்டாய பந்தத்தில், வன்முறைக்கு ஆளாகி, விவாகரத்துக் கோரி கோடு, கச்சேரிகள் ஏறி நின்ற தமிழ் மக்களின் பிரதிநிதிகள், தற்போது இணக்கப் பேச்சு வார்த்தைகளுக்கு செல்கின்றார்கள் என்றால் அந்தக் கோலம் உண்மையானதா என்ற எண்ணம் எப்படியான கணவன் என்றாலும் அவனுக்கும் இருக்கும். இணக்கத்தை ஊக்குவிக்கின்ற நல்லெண்ணம் கொண்டவர்களுக்கும் இருக்கும். பேச்சுக்கு அழைக்கும் மக்கள் பகுதியில் எந்தளவு உண்மைத்தன்மை உண்டோ, இல்லையோ தமிழ் மக்கள் தரப்பில் அவர்களை நம்பலாம் என்றநம்பகத்தன்மையைவெளிப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும்.

ஆறாவது சட்ட திருத்தம் இருந்த படியினால்தான் கூட்டமைப்பு சமஷ்டி கேட்டது என்றசட்டத்தின் திருகு தாளங்களில், இந்தப் பேச்சுக்கள் அமையுமானால் அங்கு நீதியைப் பெற்றுத் தர சர்வதேசம் தயங்கும். சம்பந்தன் தெரிவிப்பது போல நிரந்தரமான தீர்வு ஒன்றினை, அது சமஷ்டி அடிப்படையிலானது என்ற நிலைப்பாடானால். அவர்களது ஆதரவாளர்கள் புலம்பெயர் சமூகத்தைத் திருப்தி படுத்த ஆறாம்சட்டத்திருத்தத்தைப்பேசுவதும், புலம்பெயர்அமைப்புகள்தமிழீழம்தான் முடிந்த முடிவு என அறிக்கைகள்



வள்ளலார்

தருவதும், சிங்கள தரப்புகளுக்கு நழுவிச் செல்வதற்கு வாய்ப்புகளைத் தட்டத்தில் வைத்து தரும்.

ஆதலால்தான் நினைத்தபடி – தன்னிச்சையாக – தமிழ் மக்கள் பிரிந்து நின்று எது நிரந்தரமான தீர்வு என்றமையப்புள்ளியில் சந்திக்காமல், அணுகுமுறைகளை யதார்த்தமான முறைகளில் நகர்த்தாமல், மற்றவர்களைப் பின் குறை கூறுவதில் ஆகப்போவது ஒன்றும் இல்லை

"உள்ளொன்றுவைத்துப்புறமொன்று பேசுவோர் உறவாமை வேண்டும்" என்று வள்ளலார் அருள்வாக்குத் தந்தார். தமிழ் மக்கள் தனி நாடு என்பதை உள்ளே வைத்து எல்லோரையும் ஏமாற்ற புறத்தில் சமஷ்டி பேசுகிறார்கள், அந்த உறவுகள் தேவையற்றவை என்ற எண்ணப்பாடுகள் எழுவது நன்மை தரப்போவதில்லை.

வள்ளலார் தந்த பொதுமறை தமிழ் மக்களுக்கும் பொருந்தும். நேர்வே இணக்க பேச்சுகளும் தடம் புரண்டமையும் இத்தகைய போக்குகளிலும் 'தணலாய்த் தகித்துக் கொண்டிருந்த புலம்பெயர் போராளிகள் சுவாலை விட்டு எரியப் புறப்பட்டு, பின்னர் அதனை சுடுகாடாக்கியதுதான்.

பிரபாகரனுக்கு இலட்சிய பிடிப்பு, அதற்கான ஆளுமை, அர்ப்பணிப்பு என்ற தகமைகளினால் பேச்சு வார்த்தைகளில் பேரம் பேசக்கூடிய அதிகாரங்கள் இருந்தன. ஊடகவியலாளர்கள் அவரைப் பனைமர உச்சிகளுக்கு ஏற்றி வைத்தார்கள். ஆனால் கடைசியில் நுங்கினைப் பதமாக வெட்டி இறக்கும் இலாவகம் இல்லாமல், அதனை அறுத்துக் கொட்டித் தானும் விழுந்து மடிந்தது தான் மிச்சம்.

தவில்களும், நாயனங்களும் திருமணத்துக்கு மெருகூட்டுபவை. ஆனால் அவை தனி ஆவர்த்தனக் கச்சேரிகளாக மாறி, திருமணச் சடங்குகளையே திசை திருப்பி, மூன்று முடிச்சு மந்திரங்களையே கேட்க முடியாமல் அதற்கு விடாதவையாக இருக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தமிழீழம் தமிழ் மக்களின் தேவை. இலட்சியம். அவர்களது காலத்தின் தேவையுமாகலாம். சர்வதேசமோ, இந்தியாவும் கூட, தமிழ் மக்களது தேவைகருதியோ, தங்களின் தேவை கருதியோ அதனை நடைமுறைச் சாத்தியமாக்கும் முன்னெடுப்புகளை செய்வதற்கான ஆதாரங்களைக் காண முடிவதில்லை. அவை இல்லை எனில், சர்வதேசங்களின் மூலம், மனித உரிமை சபையின் ஊடாக சர்வஜன வாக்குரிமைக்கான அனுசரணைக்கும் அதிகாரத்திற்குமான ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கான காலவரையையும், அவை நகர்ந்து நடைபெறக் கூடிய பரிமாணங்களையும், அதனை நடத்துவதாகக் கூறும் புலம்பெயர் தரப்புகள் அறிய தர வேண்டும்.

வட்டுக்கோட்டை தீர்மானத்தை தமிழ் மக்கள் ஆக்கும்போது தாங்கள், தங்களின் சுயநிர்ணய உரிமையில் தங்களது இறைமையைமீட்டுதமிழீழம் அமைப்பதற்கான உறுதியை எடுத்தார்கள். சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கையிலும் (international covenant on civil and political rights - ICCPR) மற்றும் அதனுடன் இணைந்த பொருளாதாரம்மற்றும்சமூகஉரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கைகளிலும், எல்லா மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உள்ளது, அதன் மூலம் அவர்கள் தங்கள் அரசியல் அந்தஸ்தை சுதந்திரமாக நிர்ணயம் செய்து, தங்கள் பொருளாதார, சமூக மற்றும் கலாசார வளர்ச்சியை சுதந்திரமாகப் பின்பற்றலாம்



சம்பந்தன்

என இந்த சர்வதேச சட்டங்கள் சொல்கின்றன. திருமண பந்தத்தில் இருந்து விலகிக் கொள்ளலாம் என்பதை நாட்டின் சட்டம் சொல்கின்றது. இவற்றின் நடைமுறைகளில் இருக்கும் சிக்கல்கள் என்ன, எத்தனை பேர் வருட கணக்கில் அதற்காக ஸ்ரீலங்காவில் அலைகிறார்கள், ஆனால் மேற்கத்திய நாடுகளில் அதனை இலகுவில் பெற்றுக் கொண்டு விடுகிறார்கள்?

சுய நிர்ணய உரிமை சர்வதேசச் சட்டத்தில் உரிமைகள் ஆக்கப்பட்டு இருந்தாலும், எவ்வளவு மனித உரிமை மீறல்கள் உலகின் பல பகுதிகளில் நடந்தாலும், அந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிராக சுயநிர்ணய உரிமைகளைப் பாவிப்பதற்கு அதிகாரம் கொண்ட சர்வதேசங்கள் கடைப்பிடிப்பது எதிர் நிலையான ஒடுக்குமுறைகள்தான். இதனால் சர்வதேச ரீதியில் நடைமுறையில் இந்தச் சட்டம் அலங்காரமாக இருந்து வந்தாலும் வலுவிழுந்து வருகின்றன.

ஸ்ரீலங்காவின் அரசமைப்புமக்கள் எல்லோரும் சட்டங்களின் முன் சமன் என்று சொன்னாலும், நாட்டில் வழமையில் நடப்பவற்றை அனுபவங்களில் காண்பது போல், சுயநிர்ணயம் என்பதை சர்வதேச நடப்புகளில் இருந்து கணிக்க வேண்டும்.

சுய நிர்ணயம் என்பதை தமிழ் மக்கள் முன்னெடுத்த போது ஜனாதிபதி ஜே.ஆர். பௌத்தம்என்றமதவாதத்தை முன்னெடுத்து, இரு பகுதியிலிருந்தவர்களும் இதனை அரசியலாக்கி உள்ளார்கள். தமிழ் மக்கள் சுயநிர்ணயம் என்று சர்வதேச சட்டத்தில் அரசியல் செய்தால், சிங்கள மக்களோ பௌத்த மத வாதத்தை யதார்த்தமாக்கி, பெருமளவில் வளர்த்து சிங்கள பௌத்த மக்கள், தமிழ் மக்களின் தனித்துவத்தையே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று உள்நாட்டுப் பிரச்சினையாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

(வளரும்...)

## 11 வயது மகள் மீது ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

குற்றம் சாட்டப்பட்டு, தந்தையாகிய எதிரி கைது செய்யப்பட்டு, வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமி அச்சமயம் 11 வயதுடைய பாடசாலை மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.

வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகிய பாதிக்கப்பட்ட சிறுமி, தாயார் வீட்டில் இல்லாத போது மதுபோதையில் வந்து தன்னைப் பாலியல் வல்லுறவு புரிந்ததாகத் தனது தந்தை மீது குற்றம் சாட்டி நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார். வவுனியா நீதிவானின் உத்தரவின்பேரில் கடந்த 6 மாத காலமாக சிறுவர் இல்லமொன்றில் வசித்து வருகிறார் எனவும் அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட சிறுமியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய சட்ட வைத்திய அதிகாரி கன்னிச்சவ்வு சிதைவடைந்துள்ளதாக அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். சிறுமி 11 வயதுடையவர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவரது பிறப்பத்தாட்சிப் பத்திரமும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

சிறுமியின் சாட்சியத்தை சட்ட வைத்திய அறிக்கை ஒப்புறுதி செய்வதாகக் குறிப்பிட்ட நீதிபதி இளங்செழியன் எதிரியைக் குற்றவாளி எனக் குறிப்பிட்டு 15 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கியமையுடன், சிறுமிக்கு 3 லட்ச ரூபா இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்றும் 15 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்த வேண்டும் என தீர்ப்பளித்தார். இழப்பீட்டுத் தொகையை வழங்கத் தவறும் பட்சத்தில் 9 மாதக் கடூழியச் சிறையும், தண்டப் பணம் செலுத்தத் தவறினால் 3 மாத கால சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் தரப்பில் அரச சட்டவாதி செஸான் மஃப் வழக்கை நெறிப்படுத்தினார்.

## தேர்தலைக் காலம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரை விரட்டியடித்தார்கள் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர் -

நாட்டில் தேர்தல் நிச்சியமாக நடத்தப்படவேண்டும். அன்றுமாகாணசபைத் தேர்தலைக் காலந்தாழ்த்துவதற்காக செயற்பட்டவர்கள் இன்று அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பேசுவது நகைப்புக்குரியது.

13ஆவது திருத்தச் சட்டம், தேர்தல்கள் தொடர்பில் அவர்களுக்கு அக்கறை இருந்தால் கடந்த 2, 3 வருடங்களுக்கு முன்பு தேர்தலைக் காலந்தாழ்த்தி இருக்க மாட்டார்கள். நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். அது தொடர்பான நீண்டக் கலந்துரையாடல்களை நடத்தி தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். - என்றார்

## சட்டவிரோத மின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடாகச்சிக்கொடிய மானோிக்குளம் பகுதியில் விலங்குகளை வேட்டையாடுவதற்காகச் சென்ற இளைஞன் ஒருவரே அங்கு சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட மின் வேலியில் சிக்குண்டு பலியாகியுள்ளார்.

குடாகச்சிக்கொடிய மேதாமாவத்தையைச் சேர்ந்த 25 வயதுடைய உமேஸ் லக்சன் என்கிற இளைஞரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. மேலதிக விசாரணைகள் மடுக்கந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொவிட் அவசர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொவிட் - 19 வைரஸ் 2020 ஆம் ஆண்டில் பொது சுகாதார அவசரநிலையாக பிரகடனப்படுத்தப்பட்டது.

சீனாவின் ஹூபே மாகாணத்தின் வூஹானை மையமாகக் கொண்டு, 2019 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த வைரஸ் தோற்றியதாகக் கருதப்படுகிறது.

இந்த நிலையில், 2020 ஆம் ஆண்டு கொவிட் - 19 வைரஸ் உலகளாவிய தொற்றுநோயாக மாறியது.

வெற்றிகரமான தடுப்பூசி செலுத்துகை ஊடாக கொவிட் - 19 வைரஸின் தீவிரம் குறைக்கப்பட்டதன் மூலம், வைரஸ் அச்சம் படிப்படியாக குறைந்துள்ளது என்றும் உலக சுகாதார அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## தமிழர் தம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாகவும் அதற்கென்றே வெளிவிவகார அமைச்சில் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் காசியில் நடைபெற்ற பாரதியாரின் பிறந்த தின வைபவத்தில் கலந்துகொண்டு பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பன்னிரண்டு ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த மன்னார் திருக்கேஸ்வர ஆலயத்தை இந்தியப் பிரதமர் மோடி நேரில் சென்று வழிபட்டதன் பின்னர் அவ்வாலயம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு மறுமலர்ச்சி ஏற்பட்டதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவரது உரையை வரவேற்றும் அவருக்கு நன்றி தெரிவித்தும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் முழு விபரம் வருமாறு:-இடம

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெயசங்கர் அவர்கள் கடந்த 13.12.2022 அன்று காசியில் நடந்த பாரதியார் பிறந்தநாள் விழாவில், மரபுரிமைகளைப் பாதுகாக்கும் கடமைகளை இந்தியாவில் மட்டுமன்றி ஏனைய நாடுகளிலும் இந்தியா செயற்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். அந்த வகையில் பன்னிரண்டு ஆண்டுகாலமாகப் பூட்டியிருந்த இலங்கையின் பாடல்பெற்ற தலமான திருக்கேதீஸ்வரத்தையும் தாங்கள் மீளக் கட்டியெழுப்பி புனர் நிர்மாணம் செய்திருப்பதாகவும் அதன் மூலம் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பலநூறு கோடி ரூபாய்களை செலவு செய்து ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த கேதீஸ்வரம் சிவாலயத்தை மீட்டெடுத்து புனர் நிர்மாணம் செய்தமையை தமிழ் மக்கள் சார்பாக வரவேற்பதுடன் எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கை திருநாடு இராவணேஸ்வரன் ஆண்ட சிவபூமி என அழைக்கப்படுகிறது. இலங்கைத் தீவைச் சுற்றி ஐந்து ஈஸ்வரங்கள் (சிவஸ்தலங்கள்) இருந்தன எனத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் வரலாற்று ஆய்வாளர்களும் கூறுகின்றனர். அவ்வாறான ஒரு நாட்டில், சைவக் கோவில்கள் இடிக்கப்பட்டு, புதிய புதிய பௌத்த கோயில்களை உருவாக்குகிற ஒரு வேலையை இலங்கை அரசாங்கம் தொடர்ந்து செய்து வருகின்றது.

திருக்கேதீஸ்வரத்திற்கு இணையாக பாடல் பெற்றுத் திகழும் திருக்கோணேஸ்வரத்தில் கூட இந்த அரசாங்கம் புதிய கட்டடத் தொகுதியை அமைப்பதனூடாக அதன் புனிதத்தைக் கெடுத்து, அதனை ஒரு சிங்கள பௌத்த பிரதேசமாக மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. இந்திய தூதுவர் நேரடியாக அங்கு சென்று, நிலைமையை நேரில் அறிந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதைப்போலவே முல்லைத்தீவு, வவுனியா போன்ற பிரதேசங்களிலும் புராதன சைவக் கோயில்கள் இருந்த இடங்களில் அவை அகற்றப்பட்டு புத்த கோயில்களை உருவாக்கும் நடவடிக்கைகளும் அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆகவே, இலங்கையில் தமிழ் மக்களின் மரபுரிமைகளைக் காப்பாற்றுவதாக இருந்தால், அதனைக் காப்பாற்றுவதற்கான அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கேதீஸ்வரம், கோணேஸ்வரம் ஆகியவற்றின் அடையாளங்களை எப்படி இலங்கை அரசு மாற்ற முற்படுகிறதோ அவ்வாறே ஏனைய இடங்களும் மாற்றப்படும். இன்று இலங்கை அரசாங்கம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பல்வேறு வழிகளின் ஊடாக தமிழ் மக்களுக்கும் சைவ மக்களுக்கும் உரித்தான மரபுரிமைகளை மறுதலித்து, அவற்றை சிங்கள பௌத்த மயமாக்கும் முயற்சிகளை மேற்கொள்கின்றது. அந்த நடவடிக்கை உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

தொல்பொருள் பிரதேசங்களை பாதுகாப்பது தொன்மைமிக்க சைவ ஆலயங்களைப் பாதுகாப்பது போன்ற அனைத்து உரிமைகளும் அதிகாரங்களும் தமிழ் மக்களுக்குக் கிடைப்பதன் ஊடாகவே நீண்டநெடிய வரலாறுகளைக் கொண்ட அவர்களது மரபுரிமையும் பாதுகாக்கப்படும். ஆகவே இந்திய அரசாங்கம் இவற்றைக் கவனத்தில் எடுத்து தமிழ் மக்களின் மரபுரிமைகளை காலாதிகாலத்திற்குப் பாதுகாத்துக்கொள்ளும் அதிகாரங்களை அவர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம். - என்று உள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622




# ஆனந்தத் தமிழை அரவணைக்கும் மாதம்!

மார்கழி என்றாலே மனமெல்லாம் குளிரும்
நீர்பெருகி நிற்கும் நிலம்மகிழ்ந்து சிரிக்கும்
ஊர்முழுக்க விழித்து உவந்தேற்று நிற்கும்
கார்மேகம் வானைக் கவ்வியே இருக்கும்

ஆறு குளமெல்லாம் ஆர்ப்பரித்து நிற்கும்
வீறுடனே நீரும் வெளியில் வரப்பாக்கும்
ஊரவரின் கவனம் நீர்பெருக்கை நோக்கும்
மார்கழியும் மகிழ்வாய் வந்துமே நிற்கும்

குளிர்வுடைய மாதம் குறைவதனைத் தருமா
கீதைதந்த கண்ணன் மார்கழியைப் புகழ்ந்தான்
தேவரது மாதம் மார்கழியாய் சிறக்க
நாமதனைப் பீடை எனவுரைத்தல் தகுமா

சீர்காழிச் செல்வர் சம்பந்தர் பிறந்தார்
சேந்தனார் தேரை தமிழ்பாடி அசைத்தார்
சிவனாரின் நடனம் சிரேஷ்டர்கள் கண்டார்
சிறப்புகள் அனைத்தும் சேர்ந்ததே மார்கழி

தோடுடை செவியனைத் தொழுதேற்றும் மாதம்
மாதொரு பாகனை மனமிருத்தும் மாதம்
மாசிலா மனத்துடை மாணிக்க வாசகர்
வழங்கிய திருவெம்பா முழங்கிடும் மாதம்

மாலவன் மாண்பினைப் போற்றிடும் காலம்
மாண்புடை திருப்பாவை மலர்ந்திடும் காலம்
ஊனையும் உருக்கிடும் உன்னதத் தமிழை
உவந்துமே ஆண்டாள் வழங்கிய காலம்

ஆதியந்தம் இல்லா அருட்பெரும் சோதியை
வீதியெங்கும் பாடி வியந்தேற்றுங் காலம்
தாளல யமோடு பாடிவரு மடியார்
காலையது வேளை காட்டிவிடு காலம்

வண்ணத் தமிழ்பாடி வாலைக் குமரியெலாம்
எண்ணரிய பரம்பொருளை இறைஞ்சுகின்ற காலம்
கண்விழிக்கா கன்னியரை கனிவான தமிழ்பாடி
உண்ணா முலையானை உவந்தேற்றும் காலம்

கண்ணுக் கினியானை கனிவான தமிழாலே
காரிகைகள் வீதியெலாம் பரவிநிற்கும் காலம்
பெண்ணுக் கினியானை பேரருளைத் துயிலெழுப்ப
மண்பிறந்தார் தமிழ்பாடி மனமுருகும் காலம்

சைவமும் வைணவமும் சங்கமிக்கும் காலம்
சபரிமலை நாதனை உவந்தேற்றும் காலம்
ஐயப்பா சரணமென அடியார்கள் ஒலிக்கும்
உய்விக்கும் பாடலெலாம் உளமமரும் காலம்

மனங்குளிரும் மாதம் மண்சிரிக்கும் மாதம்
உளம்மகிழ இறையை உவந்தேற்றும் மாதம்
மனமுறையும் அழுக்கை துடைத்தெறியும் மாதம்
வருடமதில் நிறைவாய் வாழ்த்துரைக்கும் மாதம்

அருளான மாதம் அழகான மாதம்
ஆனந்தத் தமிழை அரவணைக்கும் மாதம்
தேவரது மாதம் திருமிக்க மாதம்
யாவருக்கும் நலமே நல்கிவிடும் மாதம்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

காலைக்கதிர் Kalaikkathir

# முல்லைத்தீவில் கால்நடைகள் கடத்தப்படுவதை தடுக்குமாறு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை!





முல்லைத்தீவு மாவட்டத்தின் உண்ணாப்பிலவு மற்றும் கள்ளப்பாட்டு ஆகிய பகுதிகளில் வாழ்வாதரத்துக்காக வளர்க்கப்படும் கால்நடைகள் கடத்தப்படுவதைத் தடுக்குமாறு கோரி மாவட்ட அரசாங்க அதிபரிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் உண்ணாப்பிலவு மற்றும் கள்ளப்பாட்டு பகுதிகளில் தொடர்ந்து கால் நடைகள் கடத்தும் செயற்பாடுகள் நடைபெறுவதாகவும் அவற்றை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு வழி வகை ஏற்படுத்தி தருமாறும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனிடம் இது தொடர்பாக அந்தப் பகுதி மாடு வளர்ப்போர் மனுவொன்றை கையளித்துள்ளனர்.

வாழ்வாதாரமாக தமக்கு சோறுபோடும் மாடுகளை கடத்தி வீட்டில் மடுவம் வைத்து இறைச்சி விற்பனை செய்யப்படுகின்றது அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும்.


ஒருசில மாதங்களுக்குள் 47 மாடுகள் கடத்தப்பட்டுள்ளன என்று மாடு வளர்ப்போர் தெரிவித்துள்ளனர்.

இதற்குப் பதிலளித்த மாவட்ட அரசாங்க அதிபர் உடனடியாகத் தாம் பொலிஸாருடனும் பிரதேச சபை தவிசாளருடனும் கதைத்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார்.

# கனடாவில் முதுகலை பட்டம் பெற்ற இலங்கை தமிழ் பெண்!

## ஒன்ராறியோ சட்டமன்றத்தில் ஒலித்த கரகோஷங்கள்

இலங்கையைச் சேர்ந்த வரதலெட்சுமி ண்முகநாதன் என்ற பெண் கனடாவில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் இரண்டாவது முதுகலைப் பட்டப்படிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார்.



கனடாவில் வசித்து வரும் இலங்கையை பூர்விகமாக கொண்ட தமிழ்ப் பெண்ணான வரதா சண்முகநாதன் (வயது - 87) யோர்க் பல்கலைக்கழகத்தில் தனது இரண்டா வது முதுகலைப்பட்டம் பெற்றுள்ளார்.

2019 ஆம் ஆண்டு தனது பட்ட படிப்பைத் தொடங்கிய இவர்இ நவம்பர் 2 ஆம் திகதி 4 ஆயிரம் மாணவர்களுடன் தனது இரண்டாவது முதுகலைப் பட்டத்தை பெற்றுள்ளார்.

இலங்கையின் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள வேலணை கிராமத்தில் பிறந்த வரதலெட்சுமிஇ உலகிலுள்ள நான்கு கண்டங்களில் மாணவர்களுக்கு கல்வி கற்பித்துள்ளார்.

இந்நிலையில்இ ஒன்ராறியோ மாநில சட்டமன்றத்தில் மேற்படி பெண் கௌரவிக்கப்பட்டுள்ளதுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று கைதட்டி அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

# வெளிநாட்டவரை திருமணம் செய்பவர்கள் பதிவாளர் நாயகத்தின் அனுமதி கட்டாயம்!

வெளிநாட்டவர்களை திருமணம் செய்யும் இலங்கையர்களுக்கு புதிய நடைமுறையொன்று கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வெளிநாட்டவர்களை திருமணம் செய்யும் இலங்கை பிரஜைகளுக்கு பதிவாளர் நாயகத்தின் அனுமதி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அதன்படி திருமண வயது வரம்பை உயர்த்துவது தொடர்பாகவும் திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளதுடன் திருமணப்பதிவாளர் சட்டத்தில் திருத்தம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி இந்த வருடம் சுமார் 1800 வெளிநாட்டவர்கள் இலங்கையர்களை திருமணம் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கைப் பெண்கள் திருமணம் செய்து வெளிநாடுகளில் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் படுவதாகப் பாதுகாப்பு அமைச்சுக்கு தகவல் முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# சமூக ஊடக செயற்பாட்டாளர் மீது கூரான ஆயுதத்தினால் தாக்குதல்!

சமூக ஊடக செயற்பாட்டாளர் டிலான் சேனநாயக்க நுகேகொடையில் கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கையில் கூரான ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில் அவர் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நுகேகொட பாகொட வீதியில் உள்ள டிலானின் வீட்டுக்கு சென்ற இருவர் இந்த தாக்குதலை மேற்கொண்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




காலைக்கதிர் Kalaikkathir

# தேசிய மலர் அல்லியா? நீலோற்பலமா? சர்ச்சை குறித்து விசாரிக்க விசேடகுழு!

## அமைச்சர் நசீர் அஹமட்



இலங்கையின் தேசிய மலர் அல்லி மலரா அல்லது நீலோற்பலமா (நில் மானல்) என்பது தொடர்பில் நிலவும் சர்ச்சைகளைப் பரிசீலித்து பரிந்துரைகளை முன்வைக்க விசேட நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் துறை அமைச்சர் நஷீர் அஹமட் தெரிவித்தார்.

முத்திரைப் பணியகம் நீலோற்பலம் மலருக்குப் பதிலாக தவறாக அல்லி மலரின் புகைப்படத்தை வெளியிட்டுள்ளது. பாடசாலைகளிலும், உயர்கல்வி நிறுவனங்களிலும் பாடப்புத்தகங்களில் உள்ள தவறான மலரின் படத்தை காட்டிக் கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக பேராதனைப்பல்கலைக்கழகத்தின் தாவரவியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் தீப்தி யகந்தாவல தெரிவித்தார்.

இலங்கையின் தேசிய மலர் அல்லி மலரா அல்லது நீலோற்பலமா (நில் மானல்) என்பது தொடர்பில் சுற்றாடல் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது. சுற்றாடல் துறை அமைச்சர் நஷீர் அஹமட் தலைமையில் அண்மையில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இலங்கையின் தேசிய மலர் தொடர்பான விடயம் தொடர்பில் பல ஆண்டுகாலமாக தீர்மானம் எடுக்கப்படாத சர்ச்சை தொடர்பில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தாவரவியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் தீப்தி யகந்தாவல மற்றும் வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் கபில யகந்தாவல ஆகியோர் இந்தக் கலந்துரையாடலின் போது நீண்ட விளக்கமளித்தனர்.

1986 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி இலங்கையின் தேசிய மலர் தொடர்பான அறிவிப்பு வெளியானது. இதற்கமைய தேசிய மலர் நீலோற்பலம் (நில் மானல்) என்பது உத்தியோகபூர்வமாக அமைச்சரவைப் பத்திரம் ஊடாக அறிவிக்கப்பட்டது. இருப்பினும் நீலோற்பலத்தை சித்திரிக்கும் விதத்தில் ஊதா நிறம் சார்ந்த அல்லி மலரின் புகைப்படம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இது உண்மையான நீலோற்பலம் இல்லை என பேராசிரியர் யகந்தலாவ கருத்துக்களை முன்வைத்தார்.

1986 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தத் தவறு 2010 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மற்றும் சுற்றாடல் துறை அமைச்சர், சுற்றாடல் துறை செயலாளர் ஆகியோருக்கும் உயிர்பல்வகைமை செயலகத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2015 ஆம் ஆண்டு தேசிய மலர் தொடர்பாக சரியான படம் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு சுற்றாடல் அமைச்சால் சரியான மலரின் புகைப்படம் வெளியிடப்பட்டிருந்த போதும் இலங்கையின் தேசிய மலரின் சிங்களப் பெயர் மானல் மலர் (அல்லி மலர்) என்றும், ஆங்கில மொழியில் புளு வோட்டர் லில்லி என்றும், தமிழ் மொழியில் நீலோற்பலம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள மொழியில் தேர்ச்சிப் பெற்ற பேராசிரியர் விமல் ஜீ.பலகல்லவின் நிலைப் பாட்டுக்கு அமையவே நீலோற்பலம் (நில் மானல்) என்ற பெயருக்குப் பதிலாக தேசிய மலராக மானல் (அல்லி) எனப் பெயரிடப் பட்டுள்ளது என சுற்றாடல் அமைச்சின் அதிகாரிகள் இதன்போது சுட்டிக் காட்டினார்கள்.

அவரது கருத்துப்படி அல்லி என்பது உன்னத மான நீல மலர் என்பதால் தேசிய மலரின் சிங்களப் பெயரை மானெல் (அல்லி) எனப் பயப்டுத்த வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டதாக அதிகாரிகள் எடுத்துரைத்தனர். தாவர வகைப்பாட்டின் உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரநிலைகளின்படி அறி வியல் பெயர் மாற்றத்துக்கு உட்பட்டிருக்கலாம். ஆனால் நீண்ட வரலாற்றைக் கொண்ட சாதாரண மக்களால் பயன் படுத்தப்படும் பொதுவான பெயர்களை மாற்றக் கூடாது என வலியுறுத்தப்பட்டது.

அல்லி என்பது பொதுவான பெயர் இலங்கையில் ஊதா நிற அல்லி, வெள்ளை நிற அல்லி என பலவகையான அல்லிகள் இருப்பதால் இலங்கையில் தேசிய மலராக நிலோற்பல மலரைத் தெரிவுசெய்ய வேண் டும் என ஒருசில பேராசிரியர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

1986 ஆம் ஆண்டு தேசிய மலரைத் தெரிவுசெய்த குழுவல் பரிசீலிக்கப்பட்ட அளவுகோல்களான பூர்வீகம் மற்றும் தனித்தன்மை, பயன்பாடு, வரலாற்று மற்றும் கலாசார முக்கியத்துவம், தோற்றம் மற்றும் விரிவாக்கம் என்பவற்றுடன் மேலதிக அளவு கோள்களான நிறம் மற்றும் வடிவம், இனப்பெருக்கம் மற்றும் பிறிதொரு நாட்டின் தேசிய மலராக இல்லாமை போன்ற அடிப்படைகளையும் பூர்த்தி செய்யும் மலராக நீலோற்பலம் காணப்பட்டதாக பேராசிரியர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

முத்திரைப் பணியகம் நீலோற்பலம் மலருக்குப் பதிலாக தவறாக அல்லி மலரின் புகைப்படத்தை வெளியிட்டுள்ளதாக பேராசிரியர் தீப்தி யகந்தாவல குறிப்பிட்டார். பாடப் புத்தகங்களில் தவறான மலரின் படம் இருப்பதாகவும் பாடசாலைகளில் மாத்திரமன்றி சில உயர்கல்வி நிறுவனங்களிலும் தவறான மலரின் படத்தைக் காட்டி கற்பித்தல் நடவடிக்கையை முன்னெடுப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் தேசிய மலர் தொடர்பில் காணப்படும் சர்ச்சை தொடர்பில் பரிசீலித்து பரிந்துரைகளை வழங்கப் பிரதமரால் விசேட நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் துறை அமைச்சர் குறிப்பிட்டார். இந்த விடயம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயம். ஆகவே விரைவான மற்றும் உறுதியான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் எனக் கூட்டத்தில் கலந்துக் கொண்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

# எம்.பிக்கள் கஞ்சாவைச் சட்ட ரீதியாக்க பல நுட்பங்களை கையாண்டுவருகின்றனர்

## போதைப்பொருள் தகவல் நிலைய சிரேஷ்ட நிகழ்ச்சி திட்ட அதிகாரி தகவல்




இலங்கையில் கஞ்சாவை சட்ட ரீதியாக்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடக்கம் பல தரப்பினரும் பல்வேறு நுட்ப முறைகளை கையாண்டு வருகின்றனர் என மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலைய சிரேஷ்ட நிகழ்ச்சி திட்ட அதிகாரி எ.சி.றகீம் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் போதைப்பொருள் தொடர்பில் தற்போது பதிவாகும் சம்பவங்கள் தொடர்பாக விஞ்ஞான ரீதியாக நோக்கும் போது சிறுவர்கள், இளைஞர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ள முடியும்.

குறிப்பாக புகையிலை உற்பத்திப் பொருள்களான சிகெரட், மாவா, தூள், பான்பராக் போன்ற உற்பத்திப் பொருள்கள் இளைஞர்கள் மத்தியில் காணப்படுவதாகப் பதிவுகள் இடம்பெற்று வருகின்றன.

அதே போன்று ஐஸ் எனக் கூறப்படும் மெத்தமடமைன் போன்ற போதைப் பொருள்கள் இளைஞர்கள் மத்தியில் பாவனை செய்யப்படுவதாகக் பதிவாகி வருகின்றன.

தற்போது, எமது நாட்டில் கஞ்சாவை சட்ட ரீதியாக்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடக்கம் பல தரப்பினரும் பல்வேறு நுட்ப முறைகளை கையாண்டு வருகின்றனர்.

ஏதாவதொரு போதைப்பொருளை விளம்பரப்படுத்துகின்ற போது, குறிப்பிட்ட போதைப்பொருள் மாத்திரமின்றி அனைத்து வகையான போதைப் பொருள்களும் மேலோங்கும்.

மேலும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டுக் கொண்டிருப்பதால் நாட்டினுள் சிகரெட் பாவனையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

எனவேஇ குறிப்பிட்ட உற்பத்தி நிறுவனத்துக்கு தங்களுடைய உற்பத்தி பொருள் பாவனையை இளைஞர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்கு ஏனைய போதைப்பொருள்களின் மீது அவதானத்தை செலுத்த முற்படுவதும் இதிலொன்றாகக் கூட இருக்கலாம். – என்றார்.

எனவே இந்தத் தருணத்தில் நாம் சிகரெட் மதுசாரம் உட்பட ஏனைய போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதற்கு – போதைப்பொருளுக்கு ஏமாறாமல் இருப்பதற்கான எதிர்ப்பு சக்தியை பிள்ளைகளுக்கு பெற்றுக்கொடுத்தல் இணையவழி கல்விச் செயற்பாடுகளின் போது போதைப் பொருள் தூண்டப்படுவது தொடர்பாக பெற்றோர்கள் அவதானமாக இருக்க வேண்டும். சிகரெட், மதுசாரம் உட்பட ஏனைய போதைப்பொருள்கள் தொடர்பாக ஏதேனும் செய்திகள் வெளிவரும் போது அது யாரால் வெளியிடப்படுகிறது? எதற்காக அவ்வாறானதொரு செய்தி வெளியிடப்பட்டது? செய்தி வெளியாகிய காலம் என்பது பற்றி தர்க்க ரீதியாக பார்க்க வேண்டும். மேலும் குறிப்பிட்ட விடயம் சமூகத்தில் பரவுவதால் இது எவ்வகையான தாக்கத்தை சமூகத்துக்கு ஏற்படுத்தும் என்பதையும் கருத்திற்கொண்டு இதனை சமூகமயப்படுத்த வேண்டும்.

சமூகத்திலுள்ள கருத்தியலாளர்கள், ஊடகவியலாளர்கள், ஆசிரியர்கள், இளைஞர்கள் என அனைத்துக் கட்டமைப்புக்களையும் இணைத்து சமூக ஆர்வலர்கள் செயற்பட வேண்டும் என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல்நிலையம் வடபகுதி இணைப்பாளர் ஆ.கோடீஸ்வரன் தெரிவித்ததுடன் இந்த விடயங்களை நடைமுறைப்படுத்துவது எங்கள் அனைவரினதும் பொறுப்பாகும். – என்றார்.

போதைப்பொருள் விளம்பரங்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாக விளம்பரப்படுத்தப்படுகின்றது எனத் தெரிவித்த மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல்நிலையம் நிகழ்ச்சிதிட்ட அதிகாரி நிதர்சனா செல்லத்துரை குறிப்பாக மாணவர்கள் இணையவழி கற்றலை ஆரம்பித்ததன் பின் இணையவழி ஊடாக போதைப்பொருள் விளம்பரப்படுத்தப்படுகின்றது. – என்றார்.

கடந்த 8 மாதங்களில் வெளிவந்த 14 திரைப்படங்களில் 13 திரைப்படங்கள் போதைப்பொருள் தொடர்பான விளம்பரமாகக் காணப்படுகின்றது.

போதைப்பொருளை ஊக்குவிப்பது தொடர்பாக சமூக வலைத்தளத்தில் 900 படங்கள் பகிரப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இது மதுசார புகையிலை சட்டத்தை மீறும் விடயம். – என்றார்.

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 6 லட்சத்து 44 ஆயிரத்து 186 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடம் மார்ச் மாதத்தில் நாட்டுக்கு அதிகளவான சுற்றுலா பயணிகள் (106,500) வருகை தந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இந்த மாதத்தின் முதல் 7 நாள்களில் மாத்திரம் 16 ஆயிரத்து 168 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

முக்கியமாக 20 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் இதுவரை நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் எனவும் அவர்களில் அதிகமானோர் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை 108,510 என்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரை 78 ஆயிரத்து 827 பிரித்தானிய பிரஜைகளும் 74 ஆயிரத்து 713 ரஷ்ய பிரஜைகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

# பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளுக்கு நோய்வாய்ப்பட்ட பிள்ளைகளை அனுப்பாதீர்!

சுவாச நோய்களால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சுவாசநோய் நிபுணர் சன்ன டி சில்வா இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இன்புளுவன்சா உள்ளிட்ட பல வைரஸ் நோய்களால் சிறுவர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நோய்வாய்ப்பட்ட பிள்ளைகளை பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டாம் என அவர், பெற்றோருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.12.2022இல் வெளியிடப்பெற்றது.